வாரப் பதிப்பு விலை சதம் 20

தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




மில்க்வைற் நீலசோப்

பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஐப்பசி திங்கள் 3-ம் நாள் (20—10—1963) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 1 | இதழ் 21

# பாத யாத்திரை மீண்டும்

## அடுத்த வாரம் ஆரம்பமாகும்

### தலைவர்கள் பாராளுமன்றம் சென்றதால் ஒத்திவைப்பு

அண்ணல் காந்திஜி அவதரித்த ஒக்டோபர் இரண்டாம் திகதி ஆரம்பமாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாத யாத்திரை கடந்த வியாழக்கிழமை மாலை வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த பிள்ளைமடத்தடியை வந்தடைந்தது. இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்துடன், சில தினங்களுக்கு மட்டும் பாத யாத்திரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதியை அடுத்து ஊர்காவற்றுறைக்கு நாளைக் காலை அடியெடுத்து வைக்கவிருந்த பாத யாத்திரைக் குழுவை, ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் வைத்து வரவேற்க வேண்டிய ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் கொழும்பில் நடைபெறவிருக்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் வழக்கில் முக்கிய சட்ட ஆலோசகராக இருப்பதால் அவர் இன்று கொழும்பு செல்கிருர். அவரைத் தொடர்ந்து ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் புதிய மூதவை உறுப்பினர் தெரிவுக்காகவும் தமிழ் அரசாங்க ஊழியர்களினது பிரச்சினைகளையிட்டுப் பாராளுமன்றத்தில் விவாதங்களை நடாத்துவதற்காகவும் பாராளுமன்றத்துக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

பாத யாத்திரை மீண்டும் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுகிறது. அடுத்த பாத யாத்திரை ஊர்காவற்றுறைத் தொகுதியிலேயே ஆரம்பமாகுமெனத் தமிழரசுக் கட்சித் தலைமை நிலையம் அறிவித்துள்ளது.

இம்மாதம் இரண்டாம் திகதி திருமலையிலிருந்து புறப்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாத யாத்திரைக் குழு காங்கேசன்துறைத் தொகுதி, உடுவில் தொகுதி, நல்லூர்த் தொகுதியின் ஒரு பகுதியை முடித்துக்கொண்டு வட்டுக்கோட்டைத் தொகுதியில் கடந்த 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் எட்டி அடி வைத்தது.

பதின்மூன்றும் திகதி காலை சுதுமலை அம்மன் கோவிலிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழு எச்சாட்டி ...யிரவ கோவிலடியால் ...வக்காட்டை வந்தடைந்தார்கள். இவ்விடத்தில் இவர்களுக்குத் தேநீர் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் சனசமூக நிலையச் செயலாளர் திரு. பொன்னம்பலம் தலைமையில் பல இளைஞர்கள் தமது கைகளைக் கிழித்துச் செங்குருதி எடுத்து தமிழினத்தின் தலைவர்களுக்கு வீர திலகமிட்டனர்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் திரு. வ. நவரத்தினம் உரை நிகழ்த்துகையில்: 'ஒரு கரத்தால் அடிமைத்தனத்தை அணைத்துக் கொண்டு மறு கரத்தால சுதந்திரத்துக்குப் போராட முடியாது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர் எவரும் அரசாங்க ஊழியம் செய்பவர்களாக இல்லாமையாலேயே இவ்வளவு உற்சாகத்துடன் ஆட்சியாளரை எதிர்க்கக் கூடியதாக உள்ளது' என்ருர்.

இங்கிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழு மூத்த நயினார் கோவிலை அடைந்ததும் காலை ஆகாரம் வழங்கப்பட்டது. பின்னர் பத்து மணியளவில் நவாலியை வந்தடைந்தார்கள். நவாலியிலுள்ள கயிற்றுத் தொழிற்சாலையில் இரண்டு மணியளவில் சமபந்தி போசனம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து திரு. தேவகடாட்சம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தமிழரசுத் தந்தை உட்பட பலர் உரை நிகழ்த்தினர்கள.

(9-ம் பக்கம் பார்க்க)




கடந்த செவ்வாய்க்கிழமை பாத யாத்திரைக் குழுவினர் சுழிபுரம் கிராமத்தில் தங்கிய பொழுது அக் கிராமத்தைச் சேர்ந்த திரு. இ. அம்பிகைபாகன் அவர்கள் அனைவருக்கும் இராப் போசனம் வழங்கினர். திரு. வ. நவரத்தினம், திரு. ஞா. நல்லையா, திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. அமிர்தலிங்கம், திரு. வி. தர்மலிங்கம், மற்றும் தொண்டர்களும் உணவருந்துகிறர்கள்.

படம்: நாதன்

### கணக்காளர் பதவி தமிழருக்கு இல்லை

சென்ற மாதம் 19ம் திகதி வெளிவந்த அரசாங்க வர்த்தமானியில் கணக்காளர் பரீட்சை ஆங்கிலத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது மந்திரி சபையின் முடிவையொட்டி அடுத்த ஆண்டு முதல் அரசாங்க அலுவல்கள் அனைத்தும் தனிச் சிங்களத்தில் நடைபெற இருப்பதனுல் கணக்காளர் பரீட்சை சிங்களத்தில் மட்டுமே நடைபெறும் என்று மறு அறிவித்தல் ஒன்று வெளியாகவிருப்பதாகத் தெரிகிறது. இதறுல் சிங்களத் தினசரியொன்று பெரும் ஆரவாரம் செய்தது.

தற்காலிக கணக்காளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளவர்கள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் சிங்களத்தில் எட்டாம் வகுப்பு சித்தி பெய்திராவிடின் அவர்கள் பதவியிறக்கம் செய்யப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது. இவர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்டால் சாதாரண எழுதுவினைஞர்களாகவே கடமையாற்றுவார்கள். இதற்கிடையே இலறசேரி நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகா தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையின் அரசாங்க கணக்குகள் அனைத்தும் அக்டோபர் முதற் திகதி முதல் சிங்களத்தில் எழுதப்பட வேண்டுமென உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது.



திருகோணமலைத் தொகுதி இடைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. எஸ். எம். மாணிக்கராசா அவர்கள் தமது நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்து விட்டுத் தலைவர்கள் புடைசூழ கச்சேரியை விட்டு வெளியேறுகிறர்.

படம்: அரசு ஸ்டுடியோ, திருமலை.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப் போர் எதற்காக?

## வாழ்வதற்கா தாழ்வதற்கா மாண்டு மடிவதற்கா?

தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள பகிஷ்கார இயக்கம் பற்றி பலவிதமான வதந்திகளைக் கிளப்பிவிட பல சக்திகள் முனைந்துள்ள இவ்வேளையில், இந்நாட்டின் செய்தித்தாள்களும் உண்மைக்கு இடம் தராமல் செய்திகளை இருட்டடிப்புச் செய்ய முற்பட்டு விட்டன. உரிமைகளுக்காகப் போராட வேண்டியது அவசியந்தானா? போராட்டத்தினால் இன ஒற்றுமை அழிந்துவிடும் என்றும் கூக்குரல் எழுகிறது. சும்மா இருந்து விட்டால இலகுவாக அடிமையாகி விடலாம். தமிழ் பேசும் இனம் என்ற பேச்சுக்கே இடமில்லாது அழிந்துவிடுவதும் நல்லதுதானே. இது முற்போக்கர்களுக்கும் பரம திருப்தியாக விருக்குமல்லவா?

அந்நியர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது, இந்த நாட்டில் வாழ்ந்த அனைவரும் இலங்கையரே அகில இலங்கைக்கும் உரித்துடையவர் என்ற எண்ணம் வேரூன்றியிருந்தது. இந்த எண்ணம் சுதந்திரம் கிடைத்த பின்னர் சிறுபான்மை மக்களிடமிருந்து அருகிப் போய் விட்டதே! இதற்குக் காரணம் என்ன?

இந்த நாட்டில் வாழும் பெருவாரியான சிங்கள மக்களில் எதேச்சாதிகார ஆசை கொண்டோர், சுதந்திரம் தங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது — தாங்களே ஏனைய இனத்தவர்களை வரையும் 'ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றவர்கள்,' என்று இறுமாப்புக் கொண்டு, வேறு இனங்களை ஒதுக்கி, புறக்கணித்து, அழித்துவிடக் கங்கணங் கட்டிக் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர்.

பண்டையச் சிங்கள அரசர்கள் பாவித்த சிங்கக் கொடியினை முதலில் இந்நாட்டின் தேசியக் கொடியாகத் திணித்தனர். சிறுபான்மையினர் எத்தனை எதிர்ப்பைக் காட்டியும், அவற்றைத் துச்சமாக மதித்தனர். தன்னிச்சைப் பிரகாரம், நடக்க ஆரம்பித்தனர்.

இந்த நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய இந்திய வம்சாவளியினரை மனிதத் தன்மைக்குப் புறம்பானவகையில் ஒதுக்கி, அவர்களை எந்தவிதமான உரிமைகளையும் அனுபவிக்கலாயக்கற்றவர்களாக்கி விட்டனர். உலகத்திலேயே இதைப் போன்றதொரு நன்றி கொன்ற செயல் இருக்க முடியாது.

தாங்கள் பேசும் மொழியை இந்நாட்டின் உத்தியோக மொழியாக ஆக்கிவிடச் சட்டத்தின் துணையை

துரியோதனன்

நாடி வெற்றிக் கொடி நாட்டி, அந்த எக்களிப்பில் துள்ளித் திரிகின்றனர் சிங்கள வெறியில் தோய்ந்தவர்கள்.

அரசாங்க உத்தியோகங்கள், உத்தியோக உயர்ச்சிகள், கல்வி வசதிகள் யாவற்றையும் தம்மின மக்களின் உடைமையாக்கிக் கொண்டு, உயர்ச்சி தம்மவர்க்கு மட்டுமே என்ற போதையில் களிநடனம் புரிகின்றனர்.

அரச சேவையில் பணி புரிந்த தமிழ் பேசும் ஊழியர்களைப் பழிவாங்கும் பொருட்டு மொழித் திணிப்பைக் காட்டிப் பயமுறுத்திப் பணியவைக்க முனைகின்றனர்.

பேசும் மொழியாலும், கொண்ட மதத்தாலும் தம்மவரிடம் மாறுபட்டிருக்கும் ஏனைய இனத்தவர்களான, இந்நாட்டின் சிறுபான்மையினரை ஒதுக்கி ஒதுக்கித் தள்ளிவிட்டு, இன்று ஒற்றுமைக் கீதம் பாட முனைந்துள்ளனர்.

### ஒற்றுமைக் கீதம் ஒலிக்க முடியுமா?

தாங்கள் மட்டும் வாழ எண்ணி, தம் கீழுள்ளவர்களைப் புறக்கணித்து ஒதுக்கி விட்டு அவர்களுடைய ஒற்றுமையைத் தேட முயற்சிப்பது நல்ல செயலாகுமா? ஒற்றுமைதான் ஏற்பட முடியுமா?

ஒரேமொழி கொண்டு இலங்கையை ஆண்டு விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் இந்த எதேச்சாதிகாரக் கும்பலிடம் ஒட்டி, உறவுகொண்டு, உதவிதேட முனைவது முழு முட்டாள்தனம் என்பதை கடந்தகாலம் நன்கு தெளிவாக்கி விட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டோர் அண்டி வாழ விரும்புவார்களா?

### குலம் கெடுக்கும் கோடரிகள்

தம்மினத்தையிட்டு எள்ளளவும் கவலை கொள்ளாத குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள் வேண்டுமானால் ஒற்றுமை முழக்கமிட்டு, சிறுபான்மையினத்தை மதியாத-அவர்களுடைய உரிமைகளைவிட்டு இஞ்சிற்றும் சிரத்தை காட்டாதவர்களிடம்- பதவிதேடி, பட்டம் தேடி, பணம் தேடிப் போகும் கூட்டம் வேண்டுமானால் ஒற்றுமைக் குரல் எழுப்பட்டும்.

'முற்போக்கு' என்று கூறிக்கொண்டு தம்மினத்தின் பின்னணி நிலையையே உணராத ஜனங்கள்தான் இன்று சிறுபான்மை இனம் அத்தனையையுமே காட்டிக் கொடுத்து ஒட்டாண்டி ஆக்கிவிட்டு, வெட்கமின்றி இன்றும் வீம்பு பேசத் தலைப்பட்டுள்ளனர்.

தன்னை ஈன்றெடுத்த தாயை மதியாத தன்மை இந்த முற்போக்குகளிடம் தாண்டவமாடியதால் தான் இன்று தமிழ் பேசும் மக்கள் தாழ்ந்து தன்னிலை கெட்டுப்போகவேண்டி ஏற்பட்டது.

### சாயம் மாறியது

அகில இலங்கையிலும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து தேடித்தரப் போவதாகத் தம்பட்டமடித்த இந்த நபர்கள் காலத்துக்கேற்றபடி தமது சாயத்தையும் மாற்றிக் கொள்ளும் தன்மையில், கொள்கையையும் இன்று மாற்றிக் கொண்டனர். இவர்களை இன்றும் நம்பிக்கொண்டு வால் பிடித்தலையும் வீணர்களையிட்டு அனுதாபப்படாமலிருக்க முடியவில்லை.

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் படிக்க வேண்டாம் என்று தலைவர்களைக் கேட்டுக் கொண்டபோது, இந்த முற்போக்கர்கள் தான் முன்னேடிச் சென்று சிங்களத்தைப் படிக்க ஆரம்பித்தார்கள். கொள்கைக் குன்றாகத் திகழ்ந்த பலரும் நிலை தடுமாற வழிவகை செய்த துரோகக் கும்பல்கள் வேண்டுமானால் [illegible] பாராமுகப் பாடி ஒலி எழுப்பிக் கொண்டே இருக்கட்டும்.

முற்போக்கு வாதிகளுக்கு முகாரி பாடுபவர்கள் தாங்கள் விட்ட பிழைகளை விரைவில் உணரத்தான் போகிறார்கள்.

### வெளிப்படை

கரிய நிறக் காகம் காலையிலும் மாலையிலும் குளித்துப் புரண்டாலும், கருமையைப் போக்க முடியாது. அதே போன்று எத்தனை தான் சிங்களத்தை நம்மவர்கள் விழுந்து விழுந்து படித்தாலும், சிங்களவர்களாகப் போவதில்லை. பௌத்த சிங்களவர்களல்லாதோருக்கு இந்த நாட்டில் எந்தவிதமான உரிமையும் கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் வெளிப்படை.

பண்டு தொட்டு இன்று வரை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உரிமையுடன் வாழ்ந்து வந்தவர்கள் தமிழ் பேசும் மக்கள். அவர்கள் தம் சொந்த இடங்களிலேயே சிங்கள ஆணவத்தால் சிதைவு பெற்று வருகிறார்கள். வேண்டாத பொருளை விழுங்கவைக்க நினைக்கும் விபரீத விளையாட்டை இன்றைய ஆட்சி, சட்டத்தின் துணையுடன் தொடங்கியுள்ளது.

நீதியற்ற, நியாயமற்ற நேர்மையற்ற செயல்களைக் கண்டிக்கத் தம்மைத் தாமே வருத்தி, அகிம்சை வழியில் அறநெறி பிறழாமல் போராடும் தமிழரசார் மீது கண்டனங்களைத் தொடுத்தும், அமைதியைக் குலைப்பவர்கள் என்று அபாண்டத்தைச் சுமத்தியும், அநியாயப் பழிசேர்த்தும் தூற்ற இன்று இங்குள்ள சகல சக்திகளும் முனைந்துள்ளன.

இல்லாத தொன்றை இருப்பதாகக்கூறிக் கற்பனைக் கதைகளைக் கட்டி மக்கள் தம் கருத்தைச் சிதறவைத்து, காடைத்தனத்திற்கும், கொள்ளைக்கும் கொலைக்கும் மக்களைத் தூண்டும் பணியில் ராஜ ரத்னக்கள் கிளம்பி விட்டனர்.

'ஆளும் இனம், நாங்கள் ஆளப்படுபவர் நீங்கள் அடிபணிந்து வாழுங்கள் அல்லது அல்லல் படுவீர்கள்' என்று பயங்காட்டிப் பணிய வைக்கும் பணியை அரசாங்க சிங்கள ஊழியர்கள் சங்கங்கள் மேற்கொண்டு விட்டன.

உண்மையைக் கூறினால் எங்கள் உரிமைகள் பறிமுதலாகிவிடுமே என்று பயந்து கொண்டு புறமுதுகு காட்டிக் கொண்டுள்ளன செய்தித் தாள்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## கவிதைப் பூங்கா

### சிந்திப்பீர் இன்றே சிறிது

—அல்லையூர் நம்பி—

சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பூமியிலே
சங்கம் அமைத்தின்று சண்டித்தனம் வளர்ப்பீர்!
'எல்லார்க்கும் எல்லாம் பொது' வென்றதத்துவத்தில்
வல்லார்க் குரிய பரிசும் பொதுவோ?
'பரிசுகேட்டம்மானை'ப் பாடலுடன் உங்கள்
பரிசுகெட்ட செய்கைகளும் பட்டதென நாம்
நினைத்தோம்.
போட்டிக் களத்தில் புளுகர் நுழைவெல்லாம்
ஓட்டிக் கலைக்கஉயர்ந்த கதையெழுதும்
'செம்பியனார்' தம்தலைக்குச் செல்களைன நீர்விடுத்த
அம்பொன்று என் உடையை ஆரத்தழுவிவிட
நம்பினேன் உம்முடைய நல்ல 'குழுப்' பெருமை.
"பார்ப்பார் தொடக்கம் பலசாதி மக்களையும்
சேர்ப்போம் சமத்துவமாய்ச் செங்கொடிக்கீழ்"
என்றுரைத்தீர்
சந்தோசப்பட்டோம் சாதிகளே இல்லையென.
யாரும் அழைக்காமல் மாடாடு போல்நுழைந்து
பேருரைகள் செய்தீர்; பெரியார் இடைமறிக்க
"வீரத் தமிழா விடுபேச" என்று சொல்லிச்
சேரச் சிரித்தீர்; சிறந்தஎழுத்தாளர் விரல்
ஓரமே காய்த்திருக்கும்; ஓட்டுகிற பேறுவின்
பாரமே தூக்கிப் பழகுமென நானிருந்தேன்.
கையிரண்டும் காத்தவர்கள், கத்தி பிடித்தவர்கள்
'செய்து' மறியல் சென்று வந்தவர்கள்
சாறம் உயர்த்தி சந்தை இரைச்சலிட்டு
கதிரை எடுத்தாடிக் கத்தும் பொழுதே என்
பிற்போக்குப்புத்தி பிடிபட்ட(து) இன்னவரே
முற்போக் கெழுத்தாளர், முறையாக நானறிந்தேன்.
செந்தமிழே சிந்தித்துச் செந்தமிழால் வாழ்பவரை
சந்தியென, நீர் எண்ணிச் சாடிநீர் ஓடிவிட்டீர்.
ஆனாலும் உங்கள் அழகுச் செயல்கள் உயிர்
போனாலும் பேரோடு பொன்றாத வாழ்வு பெறும்.
பள்ளியில் உயர்ந்து படித்தோர் இடமென்று
என்னுமாமுப் பாணம் எடுத்த தமிழ்விழவில்
புண்ணியரே நீவிர் புரிந்தசெயல் போதுமையா.
தண்ணீர் இருந்தால் தலையைவிடும் போற்றிடுவார்.
"தமிழவாதநி தோள்களிலே தூங்குதமிழ் இன்று
தொழிலாளர் கையில்" எனத் தூக்கிநீர் பேசியது
நேற்று வரைஎனக்கோ நேராய் விளங்கவில்லை
ஆற்றல் அமைந்துயர்ந்த அந்தத் தொழிலாளர்
கற்றோர் அமர்ந்த கதிரைகளைப் போய்தூக்கி
நிற்க உணர்ந்தேன் நீர்சொன்ன பொன்மொழியை.
இந்தவழியே எளிது; மரபினுக்கும்
சொந்தம்; இனியேன் சுணக்கம் பிணக்குமுறு
செந்தமிழ்நுங் கைக்குச்சிரமம்; அதுவரினும்
அந்தப் பரிசும் அரிது; கிளைநிறுவிச்
சந்திக்குச் சந்திநின்று சண்டித்தனம்புரியின்
வந்து குவியும் பரிசு இதனையுடன்
சிந்திப்பீர் இன்றே சிறிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்

கே: இதுவரை தமிழரின் நிலை பற்றிக் கொம்யூனிஸ்டுகளும், சமசமாஜிகளும் கவனமெடுக்க வில்லையே! ஆனால் தமிழரசுக் கட்சி திட்டத்தைத் தீட்டியதின் பின் குறை கூறுவதின் காரணமென்ன?

ப: மிக எளிதாக எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்கிறார்கள்!

❀

கோ. கோவிந்தராஜன்,
எலிங்டன் தோட்டம்

கே: ஐ. தொ. காங்கிரசுக்கும், இ. தொ. காங்கிரசுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: இரண்டும் இரு தலைவர்களின் தலைமைக்காக உள்ள ஸ்தாபனங்கள். முந்தியது ஒரு சங்கம். பிந்தியது ஒரு கொம்பனி என்று கூறலாம்.

❀

எஸ். எம். கமலநாதன்,
பொற்கேணி

கே: இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் தமிழ்மூலம் சிங்களம் கற்பிப்பது போல் சிங்களத் தேசிய சேவையிலும் சிங்களம் மூலம் தமிழ் கற்பித்தாலென்ன?

ப: அய்யய்யோ! வேண்டவே வேண்டாம். அவர்கள் தமிழ் மூலம் சிங்களம் கற்பிப்பதைக் கொண்டு சிங்களம் படிக்கவே முடியாது. அப்படித்தான் சிங்களம் மூலம் தமிழ்க் கொலைதான் நடைபெறும்.

இரா. முத்துராமன், உடபாகை தோட்டம், தெரணியகலை

கே: இலங்கையிலுள்ள அத்தனை தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்தாலும் இ. தொ. காவை எதிர்த்து நிற்க முடியாது என்று காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கிறாரே?

ப: இப்படி வாட்டு ஐம்பம் அடிப்பதற்காகத்தானே அங்கத்தினர் பட்டியலைத் தேவையான போதெல்லாம் தேவையானபடி நீட்டிக் கொள்கிறார்கள்.

❀

கு. வேலு, இராசகல தோட்டம்
பலாங்கொடை

கே: இன்னமும் இ. தொ. கழகம் பலாங்கொடையில் ஆபிஸ் திறக்கவில்லை ஏன்? பலாங்கொடையில் தமிழர் இல்லை என்பது அவர்களின் நோக்கமா என்ன?

ப: ஏனையா, இப்படிக் கோபப்படுகிறீர்? போதிய ஏற்பாடுகள் பூர்த்தியானதும் கிளை அலுவலகம் திறப்பார்கள். ஆமா, இது விஷயமாக ஏதும் முன்வந்து பாடுபடுகிறீரா? அல்லது வெறும் வாய்வீச்சுத்தானா?

❀

க. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: தமிழர் போராட்டச் செய்திகளை இருட்டடிப்புச் செய்தும் வருப்புவாத சக்திகளின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் ஒரு ஆங்கிலத் தினசரியைத் தமிழ் மக்கள் அறிவதாலால் அப்பத்திரிகையைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பதே அதற்குச் சாட்டையடி கொடுப்பதாகுமென்கிறேன்?

ப: ஆங்கிலப் பத்திரிகை என்ன? தமிழ்த் தினசரிகளும் அதைத்தானே செய்கின்றன. பாத யாத்திரை பற்றிய பெரும் பகுதி செய்திகளை இருட்டடிப்புச் செய்து விட்டு, ஓரிரு செய்திகளை மட்டும் மிகக் கெட்டித்தனமாக நாலு வரியில் சுருக்கி, உள் பக்கத்தில் விளம்பரங்களால் சூழப்பட்ட ஒரு மூலையில் 14—பாயின்ட் சின்னஞ் சிறிய எழுத்தில் தனிப்பந்தி தலைப்பிட்டு, வாசகர்கள் கண்ணில் படாதமுறையில் பிரசுரிக்கும் லட்சணத்தைப் பார்க்கவில்லையா? அதே சமயத்தில் இத்தமிழ்த் தினசரிகள், தமிழர் மீது வசைபாடும் திரு இராஜரத்னாவின் பிரசங்கங்களைத் தேங்காய்ப் பருமனுள்ள கொட்டை எழுத்துகளில் மூன்று பந்தி தலைப்பிட்டுப் பிரகாசமாகப் பிரசுரிக்கின்றனவே! இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

கே: திரு. குலரத்தினாவின் அறிக்கையையொட்டித் தமிழரசுத் தந்தை செல்வா அனுப்பிய மறுப்புச் செய்தி ஐ. நா. வுக்குப் போய்ச் சேர்ந்திருக்குமா?

ப: நிச்சயமாக ஐ. நா" பொதுக் காரியதரிசி திரு. யூதாண்டிடமே போய்ச் சேர்ந்திருக்கும்.

❀

ஆ. சாமி, ஆலி-எல்

கே: எனக்கு ஏதாவது உத்தியோகம் எடுத்துத் தருவீரோ?

ப: சிங்களத்தைக் கரைத்துக் குடித்து, சிங்களவராக மாறி, பின் பௌத்தராக மாறவும் நீர் தயாரா?

கே: எமது உரிமைகளை நாம் நீதி மன்றம் மூலம் பெற முடியாதோ?

ப: ஏன்; போராட்டம் நடத்தப் பயமாயிருக்கிறதா?

❀

ஆ. வெள்ளையம்மாள்,
தெரணியகலை

கே: இலங்கையின் இன்றைய பொருளாதாரச் சீரழிவுக்கு யார் காரணம்?

ப: யூ. என். பியும், சுதந்திரக் கட்சியும்.

கே: ஐக்கிய தேசியக் கட்சியின் மொழிக் கொள்கைக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கைக்கும் என்ன வித்தியாசம்?

ப: வித்தியாசமில்லை. சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கையைத்தான் யூ. என். பி. அபகரித்துக் கொண்டுள்ளது.

கே: சமரக்கொடியின் 'புரட்சி" என்னவாயிற்று? என். எம். பெரேரா இப்பொழுது என்ன ... ற— புரட்சியின்றி வாக்குப் பெட்டிகளைக் கொண்டே அரசாங்கத்தைக் கைப்பற்றப் போவதாகக் கூறத் தொடங்கிவிட்டார் என். எம்.

❀

வடலூரான், அனலைநகர்

கே: தமிழரசுக்கட்சி பகிஷ்கரிப்பு, சத்தியாக்ரகம் என்பனவற்றை நடத்துவதென்றால் சிறிமா அரசாங்கம் இராணுவத்தையும் கடற்படையையும் வடமேற் மாகாணங்களில் குவிப்பதின் காரணமென்ன?

ப: வட இலங்கையை ஏறத்தாழ ஓர் ராணுவக் கோட்டையாக்கியுள்ளனர். ஆயினும் என்ன பயன்? அறப்போரை அணு குண்டால் கூடத் தோற்கடிக்க முடியாதே!

கே: குயுக்தியாரே! யார் உத்தரவின்படி கேள்விக்குப் பதில் கூறுகிறீர்?

ப: கேள்வி கேட்பவர்களின் உத்தரவின் படி.

❀

தமிழ் மணி, மஸ்கெலியா

கே: மலையகத்தில் திரு. கே. எம். பி. ராஜரத்னா ஒரு தொழிற் சங்கம் அமைத்து அதில் தமிழர்களையும் சேர அனுமதித்தால், அறியாமையினால் வாழும் லட்சக்கணக்கான காங்கிரஸ் அங்கத்தினர்களில் சிலர் அதிலும் சேர தயங்கமாட்டார்களல்லவா?

ப: ஒரு டசன் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சங்கம் அவரிடமும் இருக்கிறதே! அதில் கால் டசன் பேர் வெலிமடையிலுள்ள தமிழர்களாம்.

கே: "நாம் தமிழர்" இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "நாம் சிங்களவர்" இயக்கத்தின் தலைவர் திரு. ராஜரத்தினாவிற்கும் அவரின் தொண்டர்களுக்கும் தென் இந்தியா செல்ல பாஸ்போட் கிடைத்து விட்டதா? போராட்டத்திற்கு என்று பயணமாகிறார்கள்?

ப: கள்ளத் தோணிகளைத் தயார் செய்வதாகக் கேள்வி

❀

ரா. சலமன், கொழும்பு-2

கே: நான் மலை நாட்டில் பிறந்து வளர்ந்தவன். எனது பெற்றோர்களும் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர்களே. எனது பிறப்புப்பதிவுப் பத்திரத்தில் எனது பெற்றோரை இலங்கைத் தமிழர்களென சிங்களத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். எனது நிலை என்ன?

ப: நீங்களும், உங்களின் தந்தையும் இலங்கையில் பிறந்ததற்குப் போதிய ருசுக்களிருப்பின், நீங்கள் சட்டப்படி இலங்கை வம்சாவளிப் பிரஜையே.

❀

இரா. சிவலிங்கம்,
கொழும்பு-6.

கே: தமிழனைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளைத் திருத்த வழி என்ன?

ப: சமூகப் பகிஷ்காரம் செய்யுங்கள். திருந்தி விடுவர்.

❀

நா. தம்பிராசா, கொழும்பு-11

கே: எனது நண்பரொருவர் தீவிர தி. மு. க அனுதாபி. அவர் தமிழரசுக்கட்சியின் பகிஷ்கரிப்பு இயக்கத்தைக் கண்டிப்பதுடன் சிங்களப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள், சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டால் என்ன என்கிறார். இதற்கு என்ன பதில் கூறுவது?

ப: கடந்த வாரம் சுதந்திரன் தலையங்கத்தை வாசிக்கச் சொல்லுங்கள்.

❀

எஸ். சத்திவேல், புக்கந்த

கே: நம் ஈழத்தில் நடக்கும் அறப்போராட்டத்திற்கு எமது தமிழ் நாடு உதவி எதுவும் கொடுக்குமா?

ப: கொடுக்கும்—தார்மீக ஆதரவை



அதிகாலையிலேயே தொண்டர்கள் புறப்பட ஆயத்தமாகிவிடுகின்றனர். தளபதி அமிர்தலிங்கத்தின் புதல்வன் தானே தளபதி போல் முன் செல்ல முந்திவிடுகிறான். கையில் மூவர்ணக் கொடியுடன் புறப்பட ஆயத்தமாகிவிட்டான்

# தமிழை மறப்பேனு?

காசி. ஆனந்தன்

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும்—என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும்—வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோரம் கிடந்து
கீழ்நிலை யுற்றாலும்—மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனே?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும்—ஓலைப்
பாயில் நெளிந்து மரணம் அடைந்து
பாடையில் ஊர்ந்தாலும்—காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும்—என்றன்
தாயின் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனே?

பட்ட மளித்துப் பதவி கொடுத்தொரு
பஞ்சம் இழுத்தாலும்—ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்
கால் கை பிடித்தாலும்—என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும்—அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனே?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும்—என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும்—உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும்—ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனே?




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**
**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட, கிழக்கில் சிங்களம் அமுல்

## நடத்த முடியாதாம்

## 'சிங்களத் தந்திகள் கிழித்தெறியப் படுகின்றன'

### சிங்களப் பத்திரிகை தரும் தகவல்

'1964 ஜனவரி முதற் திகதி முதல் அரசாங்க அலுவல்கள் சிங்களத்தில் நடைபெற வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதெனினும், அந்த முடிவு வட, கிழக்கு மாகாணங்களில் அமுல் நடைபெருது' என்று 'தவஸ' பத்திரிகை கொழும்பில் நடைபெற்ற வட, கிழகரு இலங்கை அரசாங்க அதிபர்களின் மாநாட்டைப் பற்றி வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதற்கான காரணம் இப்பகுதிகளில் அரசாங்க அதிபர்களின் அலுவலகங்களிலும், இதர முக்கிய அலுவலகங்களிலும் பிரதான உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள், பியோன்கள் முதலியோர் 98 விகிதம் சிங்களத்தின் விரோதிகளான தமிழர்களாக இருப்பதே என்று இப்பத்திரிகை எழுதுகிறது.

#### சிங்களத்தை ஒழிக்க தமிழரசுச் சதியாம்!

விவசாய சேவை இலாகாவிலுள்ள ஒரு தமிழ் அதிகாரி அந்த இலாகாவுக்கு அனுப்பப்படும் சிங்களக் கடிதங்களையும் சிங்களத் தந்திகளையும் கிழித்தெறிந்து விடுவதாகவும் அவர் பற்றி உயர்தர அதிகாரிகள் விசாரணை செய்வதாகவும் 'சவஸ' (சிங்கள மாலைத் தினசரி) 15-10-63 ல் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

'இந்த இலாகா கமிஷனருக்கும், விவசாய அமைச்சருக்கும் தெரியாமல் தமிழ் மாகாணங்களுக்கு அதிகமான உரம் முதலிய உதவிகள் அனுப்பப்படுவதாகவும் இந்த இலாகாவில் சிங்களவர்களுக்கெதிராகச் சதி செய்யும் தமிழரசுக் கட்சியினர் இருப்பதாகவும், விவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவுக்கு உதவி புரிவதற்காக அமைக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் குழு தெரிவித்துள்ளது' என்று 'சவஸ' மேலும் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை 'இடதுசாரிகள் எந்தப் பக்கம்' என்ற தலைப்பிட்டு ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

இத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

'தமிழ் மொழி உரிமைப் போராட்டம், நாம் தமிழர் இயக்கம் அகிய இரு விஷயங்களிலும் இடதுசாரி ஐக்கிய முன்னணி எந்தப் பக்கம் என்பதைத் தெரிந்து கொள்ள மக்கள் விரும்புகின்றனர்.

தோட்டப் பகுதிகளில் 'நாம் தமிழர்' இயக்கத்துக்குத் தோட்டத் தொழிற் சங்கங்கள் உதவுவதாக ஒரு செய்தி கூறுகிறது. இச்செய்தி ஓர் ஐயத்தைத் தோற்றுவித்துள்ளது.

### சிங்கள இதழ்களில்...

'தமிழ் மொழிப் போராட்டத்துக்கு இடதுசாரியினர் உதவி அளிக்காவிட்டாலும், இடதுசாரி எம். பி. கள் வாயை மூடிக்கொண்டிருப்பது நன்று' என்று தமிழரசுத் தலைவர்கள் கடந்த சில தினங்களாகத் தங்களின் பிரசாரக் கூட்டங்களில் கூறி வருகின்றனர். தமிழ் மொழிப் போராட்டத்துக்கு இடதுசாரிகள் ஆதரவளிக்கவில்லையென்பது இதிலிருந்து புலனுகிறது. ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும். அத்தோடு அதனை இடதுசாரித் தலைவர்கள் பகிரங்கமாகவும் கூறி விட வேண்டும்.'

#### தோட்டப் பகுதியில் குடும்பக்கட்டுப்பாடு

ஆளும் கட்சியின் வாராந்தப் பத்திரிகை 'சிங்கலே' அக்டோபர் 10ம் திகதி இதழில் 'குடும்பக்கட்டுப்பாட்டை தோட்டங்களில் தொடங்கவும்' என்று 8 பத்தி தலைப்பிட்டு ஒரு விசேடக் கட்டுரை எழுதியுள்ளது.

'தோட்டங்களில் மிக வேகமாகப் பிச்சைக்காரர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனர். நாய் பூனைகளைப் போல பிரஜா உற்பத்தி அதிகரித்து வருவதால் தோட்டங்களில் இந்தியர்களின் தொகை இப்பொழுது 20 லட்சத்தை நெருங்கிவிட்டது. எனவே குடும்பக்கட்டுப்பாடு, கர்ப்பத்தடை என்பனவற்றைத் தோட்டப் பகுதிகளில்தான் தொடங்க வேண்டும். இந்த முயற்சி தோட்டங்களில் வெற்றி பெற்ற பிறகு, வட. இலங்கையில் அதனைத் தொடங்கி, வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாட்டையும், கர்ப்பத்தடையையும் சிங்களவர்களிடையே புகுத்த முயற்சி செய்வது பணத்தை வீணடிப்பதாகும்' இவ்வாறு 'சிங்கலே' எழுதுகிறது.

#### ஒரு குடும்பத்துக்கு 3—4 துப்பாக்கிகள்

வட, கிழக்கு மாகாணங்களிலும், மலைநாட்டுத் தோட்டங்களிலும் தமிழர்கள் துப்பாக்கிகளைச் சேக [illegible] [illegible] 'சவஸ' (14-10-63) கூறுகிறது. இப்பிரதேசங்களிலே சில தமிழ்க் குடும்பங்களில் மூன்று, நான்கு துப்பாக்கிகள் இருப்பதாகவும், அவைகளுக்கு லைசன்சுகள் கிடையாதென்பதும் தெரியவந்துள்ளது' என்று இப்பத்திரிகை மேலும் குறிப்பிடுகிறது.

## ஓய்வு பெறுகிருர்



திரு. கே. மைக்கேல் ஆசிரியருக்கு 10—10—63ல் 60 வயது பூர்த்தியாகியது. அன்றுடன் அவர் 2-1-30ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஆசிரியராகக் கடமையாற்றிய கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை உயர்தர முஸ்லிம் பெண்கள் ஆங்கில பாடசாலையிலிருந்து இளைப்பாறுகிருர்.

26 பிள்ளைகளுடன் 2—1—30ம் ஆண்டில் கொழும்பு பழைய சோனகத் தெருவில் இப் பாடசாலை ஆரம்பமானது. தற்போது இப் பாடசாலை 1000த்துக்கு மேற்பட்ட பிள்ளைகளுடனும் 30 ஆசிரியர்களுடனும், முஸ்லிம் பெண் பிள்ளைகளின் கலாச்சாரத்திற்கு ஏற்றவிதமாக மிளிர்கின்றது. இதற்கு இவரது விடாமுயற்சியும் ஒரு காரணமாகும்.

இந்தியாவில், திருநெல்வேலி ஜில்லா கிழ்வனேரி ஊரைச் சேர்ந்த ஆசிரியர் மைக்கேல், சிறந்த மத நம்பிக்கை உள்ள கத்தோலிக்கத் தமிழர் என்ருலும் தனது வாழ்நாள் முழுவதும் முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கே செலவிட்டார்.

இவருக்கு இப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊரவர்கள் எல்லோரும் சேர்ந்து சிறந்த பிரியாவிடை வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வருவதாக அறிகிறேம்.

## கல்லுக்கு பத்து ரூபா!

சென்ற வாரம் மண்டைதீவு சிறுப்புலம் மைதானத்தில் தீவுப்பகுதித் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் அமைக்கப்பட்ட மேடை மீது கால்ருத்தல் நிறையுடைய கல் ஒன்று வந்துவிழுந்தது. அதை மண்டைதீவு த. வா. முன்னணிச் செயலாளர் சி. பாலசிங்கம் எடுத்து ஏலத்தில் விட்டார். அதைப் புங்குடுதீவு இளைஞர் ஒருவர் பத்து ரூபா விலை கொடுத்துப் பெற்றுக்கொண்டார். இப்பணம் தமிழ் மொழிப் போராட்ட நிதிக்குச் சேர்க்கப்பட்டது.

இக் கூட்டத்தில் தீவுப் பகுதிப் பிரதிநிதி, தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர், மண்டைதீவு த. வா. மு. செயலாளர்-பாலசிங்கம், சி. ந. சோதிவேல் (அல்லையூர் வேலன்) அ. தேவராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## சந்தியில்....

ருஷ்ய—சீன கொம்யூனிச கொள்கை அனுட்டானத்திலே இன்று கருத்து மோதல் ஏற்பட்டு, அதில் உலகிலுமுள்ள கொம்யூனிஸ்டுகள் பிளவுபட்டுள்ளனர். இலங்கையிலும் இந்த கொம்யூனிச அண்டத்தின் பிளவு தலைகாட்டாமலில்லை.

* * *

மட்டக்களப்பிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சி பற்றி அம்மானுக்கு ருசிகரமான தகவல்கள் கிடைத்துள்ளன. இங்கு கொம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முன்னேடியாக விருந்தவர் இந்த நாட்டவரல்ல. இந்த நாட்டவரல்லாத ஒருவருக்கு இந்த நாட்டு அரசியலைப்பற்றி ஆவலிருப்பது பற்றி பலர் ஆச்சரியப்படாமலில்லை. இந்த அந்நியருடைய அக்கறைக்குக் காரணம் தெளிவாக இப்பொழுது தெரிந்து விட்டது.

இந்த நபர் வாழ்க்கையில் பற்றற்ற துறவியைப் போல் தான் வாழ்ந்து வந்தார் என்று பலரும் நம்பினர். இந்தியரான 'இவர் இன்று சீனச் சார்புடையவராக இயங்கி வருகிருர்.

* * *

கட்சி வேலைகளுக்காக சிலர் அடிக்கடி கொழும்பு செல்லுகிருர் என்று பலரும் கருதுவதுண்டு. ஆனல், இப்பொழுது இவர் அடிக்கடி ஏன் வருகிருர் என்பது தெரிந்து விட்டது. பல வழிகளிலும் தான் சேகரிக்கும் பணத்தின் பெரும் பகுதியை தன்னுடைய சொந்த ஊருக்கு, கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கிருராம். பல வருடங்களாக இந்தவேலை நடந்து வருகிறதாம். சரியான புள்ளி விபரங்களை அம்மானின் ஒற்றர்கள் சேகரித்து வருகின்றனர்.

* * *

இலங்கையில் இப்பொழுது பெருந்தொகையான இந்திய ருபாய் நோட்டுக்கள் நடமாடுவதாக வர்த்தக வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. இந்த நோட்டுக்கள் அசல் இந்திய நாணயமாக இருக்க முடியாது என்ற ஐயம் இந்த வட்டாரத்துக்கு ஏற்பட்டுள்ளதாம்.

பெருந் தொகையாக இந்த வகை நோட்டுக்களை இலங்கையில் நடமாட விட்டது யார் என்பதை எவரும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்த நோட்டுக்கள் பெருவாரியாகத் தினசரி இங்கிருந்து இந்தியாவுக்குக் கடத்தப்பட்டு வருகிறதென்று பேச்சு அடிபடுகிறது.

இலங்கையிலுள்ள ஒரு அன்னிய தூதராலயத்துக்கும் இந்தக்கைங்கரியத்துக்கும் தொடர்பு இருக்கலாமோ என்று சிலர் சந்தேகிக்கின்றனர். இந்தியாவில் தனக்கான ஒரு நிரந்தர ஒற்றர் படையை இயக்க ஏதுவாகவிருக்கவே இத்தகைய நோட்டுக்களை, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கள்ளத்தனமாக அனுப்ப ஒரு அன்னியநாடு முயற்சி செய்வதாகவும் தெரிகிறது.

இணையற்ற அழகுபெற துணை செய்பவை

லதா மணிப்புரி சாரிகளே!!



லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினுலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,

கொழும்பு.

—Mylads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி, சமய பேதம் கற்பிக்கும் அறியாமையைச் சாடுவோம்

## எமதினம் உரிமை பெற அறிவு விழிப்பு அவசியம்

—இரா. மலைச் செல்வன்—

அறியாமை, மூடநம்பிக்கையால் நம்மிடத்தில் எத்தனையோ குறைபாடுகள். அக் குறைப்பாடுகள் நீங்கினால் அன்றி நாம் முன்னேற முடியாது. நம்மிடம் மறுமலர்ச்சி காண்பதும் அரிது.

'ஜாதி, சமயம்' இவைகளை நம்மிடத்தில் நீங்காது, என்றும் தொற்றிக் கொண்டிருக்கும் கொடுநோய்.

இந்த நோய்தான் நம்மை எப்போதும் விடாது பிடித்துக்கொண்டேயிருக்கிறது. இதனால், நாம் எவ்வளவு, ஒற்றுமையின்றி, பலம் குன்றி நலிவடைந்திருக்கிறோம் பார்த்தீர்களா?

'கீழ்சாதி' என்று சொல்லப்படுகிறவர்களைத் தொட்டதுமே உடம்பு சிலிர்க்கிறது ஒரு சிலருக்கு, துள்ளிக் குதிக்கின்றனர் மற்றும் சிலர்.

இவர்களிடத்தில் என்ன ஒட்டிக் கொண்டதோ தெரியவில்லை! ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

அவன் நம்மோடு சேர்ந்தால் நம் குலத்திற்கே ஆகாது; தெய்வத்திற்கு அடுக்காது என்கிறார்கள்.

ஆனால்,

தாழ்ந்தப்பட்டவர்களும், உயர்ந்தோர் எனக் கூறப்படுபவர்களும் எவ்வித வித்தியாசமின்றியே காணப்படுகிறார்கள். உருவத் தோற்றத்தில் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறார்கள். வாழ்க்கை முறையிலும் வித்தியாசமின்றித்தான் வாழ்கிறார்கள். இருந்தும் பேதம்.

'உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி' என்று எந்த ஆதாரமும் இல்லை. ஆராய்ச்சியும் இல்லை.

'தொட்டால் தோஷம், நிழல்பட்டால் தீட்டு' என்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், அவர்களுடைய வீட்டில், மாட்டுக் கொட்டகைகளில் வேலை செய்பவன் 'தாழ்ந்த ஜாதி' என்று கூறப்படுகிறவனே. அவன் கறந்த பாலைத்தான் சுவைத்துப் பருகுகிறார்கள், அப்போது மாத்திரம் தோஷம் இல்லையா? செய்வது ஜாதியில்லை என்று. செப்புவது ஜாதி உண்டென்று. என்னே அறியாமை!

### அர்த்தமற்றது

எனவே, ஜாதி பேதம் பார்ப்பது அர்த்தமற்ற ஒன்றே தவிர வேறு எதுவுமல்ல.

இப்படி 'ஜாதி ஜாதி' என நாம் அநாவசியமாகப்பேதம் பார்ப்பதால்தான் ஒற்றுமை இன்றிக் கிடக்கிறோம். நம் பிரிவினையைக் கண்ட அன்னியர்கள்கூட நம்மை ஏமாற்றி வாழ்கிறார்கள். அதனால் நாம் அடைந்த துன்பங்கள் எத்தனை?

எனவே, நாம் 'ஜாதி பேதம்' பாராமல் இருந்தால் அன்றி நாம் உரிமை பெறவும் முடியாது. நம் இனம் — தமிழ்க் குலம் சீர் திருந்தி முன்னேறவும் முடியாது.

முதலிலே, ஒவ்வொரு குடும்பங்களும் சீர்திருந்த வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களும் பல்கலைக் கழகங்களாக மாறவேண்டும்.

இன்று நாம் ஆராய்ந்து பார்த்தால் ஒரு குடும்பம் பின்னேற்றப் பாதையிலே தான் சென்று கொண்டு இருக்கிறது. ஒளி இழந்து, 'அறியாமை' அகழியிலே ஆழ்ந்து கிடக்கிறது. இப்படி இருள்படிந்து இருக்கக் காரணம், அங்கு குடிகொண்டிருக்கும் குறைபாடுகளே.

ஒரு குடும்பம் சீரும் சிறப்போடு, பலர் பார்த்து வியக்க, மறுமலர்ச்சிப் பாதையிலே செல்லப் பொருள் வேண்டும். பொருளின்றி இல்லறம் சிறக்காது. எனவே மனை வாழ்வு மாண்புடன் விளங்கத்தான், பொருள்களை எவ்வளவோ துன்பப்பட்டு பெறுகிறோம்.

பெற்றெடுத்த குழந்தைகளைப் படிக்க வைக்க, கல்விச் சாலைகளுக்கு அனுப்பவும் முடியாமல் அல்லல் படுகிறோம். இவர்களைச் சிறுவயதிலே வேலைசெய்ய அனுப்பி விடுகிறோம். இவர்களுடைய பிற்கால வாழ்வை எண்ணிப் பார்க்கிறோமா? அதுதான் இல்லை. நமக்கு உழைத்துக் கொடுத்தால் மட்டும் போதும் என நினைக்கிறோம்.

### வாழ்வது எப்படி?

பெற்றோர்களின் செயலால் பிள்ளைகள் மூடநம்பிக்கையில் அறிவின்றி அறிவிலிகளாகத்தான் வாழ வேண்டி இருக்கிறார்கள். இதனால், அச்சிறார்கள் வாழ்வதுதான் எப்படி?

எனவே குடும்பங்களிலுள்ள குறைபாடுகள் நீங்கிச் சீர்திருந்த வேண்டும். அறியாமை அகன்று, முன்னேற வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களும் சிறந்து விளங்கினால்தான், அக் குடும்பத்தில் உள்ளவர்கள் தம் இனத்தைப்பற்றி சிந்திப்பார்கள் — உரிமைக்காக உழைக்கவும் பாடுபடுவார்கள்.

அறியாமை என்னும் இருள் நீக்கி, மறுமலர்ச்சி என்னும் வெளிச்சம் தோன்ற அறிவு என்னும் ஒளி விளக்கு வேண்டும். இவ் விளக்கின்றி அறியாமை இருளை அகற்றுவது அரிது.

### பகுத்தறிவு வேண்டும்

பகுத்தறிவு! மனிதனின் மூளையில் அறிவுச் சுடரை பரப்பும் அணையாத விளக்கு! பெருஞ் சூரியன்! மனித அறிவின் துலாக் கோல்! அஃதொன்றே எப்போதும் மாறுதலடையாத துருவ நட்சத்திரம்!

ஆம்! அறிவு...பகுத்தறிவு, அதுதான், மாக்களையும் மக்களையும் பிரிக்கும் ஒரு கருவி. அந்த அறிவு இல்லையேல், மற்ற உயிர்களும் மனிதனும் ஒன்றுதான். இந்த அறும் அறிவுதான் உலகில் வதியும் உயிரினங்களிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காண்பிப்பது.

எனவே, இப் பகுத்தறிவு மரம் வளர 'கல்வி' என்னும்

(13ம் பக்கம் பார்க்க)



அளவெட்டி தெற்கில் உள்ள முற்போக்கு வாலிபர் சங்க சனசமூக நிலையத்தில் பாத யாத்திரைக் குழுவினருக்கு அளிக்கப்பட்டவரவேற்பின் போது வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் பாதயாத்திரையின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்துகிறார். மல்லாகம் வழக்கறிஞர் திரு. சு. நடராசா, உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம், முற்போக்கு வாலிபர் சங்கத் தலைவர் திரு. ஏ. நல்லையா, சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம், மற்றும் பாத யாத்திரைத் தொண்டர்களும் அருகில் நிற்கிறார்கள்.

படம்: நாதன்.

## மஸ்கெலியா மாவட்ட தலைவர்கள் கூட்டம்

கடந்த 29-9-63ல் மஸ்கெலியா இலங்கைத் தொழிலாளர் கழக அலுவலகத்தில் திரு. எஸ். சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற மஸ்கெலியா மாவட்டத் தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில், திரு. எஸ். சாமிநாதன், 'நாம் நமது கழகத்தில் சேர்ந்தால் மட்டும் போதாது. கழகத்தின் கொள்கைகளுக்கமையக் கடைசி வரை ஒரே கொடியின் கீழ் நின்று நமது இழந்த செல்வாக்கை மீண்டும் பெறப் பாடு படவும் வேண்டும்' என்று தமது தலைமையுரையில் வலியுறுத்தினார்.

அடுத்துப் பேசிய அட்டன் மேலதிகப் பிரதிநிதி திரு. இ. நாகேந்திரம், இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கொள்கைகளைத் தெளிவாக விளக்கிக் கூறினார்.

மேற்படி கூட்டத்தில் மஸ்கெலியா மாவட்ட உத்தியோகத்தர்களாகக் கீழ்க்கண்டோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: எம். பெரியசாமி-லட்சுமி தோட்டம். துணைத் தலைவர்: எஸ். வெள்ளையன்-இங்கிலீஸ்வத்தை. காரியதரிசி: தை. கருப்பையா—மஸ்கெலியா. துணைக் காரியதரிசி: எம். மெய்யன்-பெரிய தெய்வகந்தை.

பன்னிரண்டு பேர் கொண்ட கமிட்டி யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மலைநாடு

# மாண்பு மிக்க மக்கள் கட்சி மலையகம் வந்து விட்டது

## கண்ணியத் தலைவர்கள் கட்டளையிட்டால் விண்ணையே மண்ணுக்கு வரவழைப்போம்

மக்களாட்சி மலர்ந்து பல நாட்கள் கடந்து விட்டன. மலையகத்து மக்களின் வாழ்வில் ஒளி உதயமாகவில்லை இன்னமும். காடெல்லாம் களனிகண்டு, கொடிய விலங்குகளுடன் உயிரையே பணயம் வைத்து விளைவாடி, தென்கிழக்கு ஆசியாவின் சொர்க்க பூமியாக ஈழத்திருநாட்டை உருவாக்கினர்.

இந்த நல்ல மனிதர் நாளினும் பொழுதிலும் நலிவடைவதைக்காண நல்லவர் உள்ளம் கண்ணீர் விடும். இந்த மறவர் கூட்டத்தை நிலைகளாக வைத்து உலகெல்லாம் பவனி வந்த தோழர் கூட்டம், ஆசியாவின் ஜோதி, பாரதத்தின் பிரதமர் என்ற மாமேதையைக் கொண்டு மலையகத்து மக்களை வாழ்விப்போம் என்று ஏமாற்று வித்தைகள் பல புரிந்த காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது இராகத்தை மாற்றிப் பாடுகின்றனர் இதுவும் சொந்த நலன் கருதியே.

மொழி, நில குடியுரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு, அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டு, கள்ளத் தோணிகள் என்ற களங்கத்துடன் வாழும் மக்களுக்குத் தொழில் உரிமையும் கிடைக்காதவாறு செய்யப்பட்டு இருக்கிறதே. இன்னமும், பஞ்சசபையில் புரளும் தொழில் தலைவர்கள் கண்களை மூடி மண் தூவுகின்றனர். உலகம் இவர்களைக் கண்டு நகைப்பதை உணர்ந்த இந்தத் தலைவர்கள்

### கரவைச் சலீம்

பகட்டுக்காக வேலை நிறுத்தங்களை உருவாக்கி, அடிபணிந்து ஆட்சியின் கொடுமைக்கு ஆலாத்தி எடுத்ததைக் கண்டோம். இதை உணர்ந்த மலையகத்து மக்கள் சொல்லாமலே, செயலாலே, தன்மான உணர்ச்சியினால் உந்தப்பட்ட மக்களின் கட்சியை (தமிழரசு) மலையகத்திற்கு அழைத்தனர்.

தோட்டத்து வாழ் மக்களை வாழவைப்பது, தொழிலாளர் கழகத்தின் பெரும் பொறுப்பு. மலையகத்து மறவர்களின் பெரும் நம்பிக்கைக்கு ஏதுவான இக்கழகம் நல்ல பணிபுரியும் என்று எல்லோருமே எண்ணி அதற்கு-உதவ முன் வந்துள்ளோம்.

[illegible] மலையகத்து மக்களும், இந்நாட்டின் பிரஜைகள், ஈழத்திருநாட்டின் ஒப்பற்ற புதல்வர்கள், அவர்கள் வாழ்வதும், மடிவதும் இந்த மண்ணில் தான் என்பதை நிலைநாட்டி, அகிலமெலாம் அவன் புகழ் மணக்கச் செய்வதும் தொழிலாளர் கழகத்தின் ஒப்பரிய பொறுப்பு என்பதை உணர்ந்து எமக்கும் விடுதலையின் ஒளியை பெற்றுத் தருவார்களாக.

இந்த முயற்சியில் நாம், நமது தலைவர்களுக்கு எந்த வகை உதவியும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றோம். விடுதலையின் விடிவெள்ளியை அடைய எந்தத் தியாகத்தையும் செய்ய நாம் காத்திருக்கிறோம். கண்ணியம் மிக்க தலைவர்கள் கட்டளை இட்டால் விண்ணையே மண்ணுக்கு வரவழைக்கும்

(13-ம் பக்கம் பார்க்க)

மந்திர சக்தியை நிரூபிப்பதற்கு

உங்களுக்கு நிறைவேறவேண்டிய காரணங்களை நிறைவேற்றித்தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. உங்கள் காரணங்களை அறிவிக்கவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

பி. எம். திசாநாயக்க,

கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்யூனிஸ்டு எழுத்தாளர்கள் கூழ்முட்டை வீசினர்

## சாகித்திய மண்டல தமிழ் விழாவில் நடந்த உண்மைச் சம்பவங்கள்

இலங்கை சாகித்திய மண்டலத்திலுள்ள சில தமிழ் உறுப்பினர்களின் முயற்சியால், சென்ற 5, 6 ந் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் குமாரசாமி மண்டபத்தில் ஓர் தமிழ் இலக்கிய விழா நடைபெற்றது.

விழாவின் செயலாளராக இலங்கைப் பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் கடமையாற்றினர். இலக்கியத்தைப் பொறுத்த வரையில், வேறுபட்ட கொள்கையுடையோர் பலர் விழாவிற்குப் பேச்சாளர்களாக அமைக்கப்பட்டிருந்தனர்.

ஈழத்திலுள்ள பிரபல தமிழ் அறிஞர்கட்கும், எழுத்தாளர் மன்றங்களுக்கும், கலை மன்றங்கட்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. விழாவில் பங்கு பற்றிய அறிஞர்களின் சொற் பொழிவுகளைத் தினசரிகள் மூலம் நேயர்கள் படித்திருப்பார்கள்.

விழாவில் நடைபெற்ற குழப்பத்தை வேண்டுமென்றே பிரமாதப் படுத்திச் சில தமிழ்த் தினசரிகளும் ஆங்கிலத் தினசரிகளும் எழுதியிருந்தன.

குழப்பம் நடைபெற்ற போது மண்டபத்தில் நின்று எல்லாவற்றையும் அவதானித்த நமது விசேட நிருபர் தரும் விபரங்களை வாசக நேயர்கட்குச் சமர்ப்பிக்கின்றோம்.

[ஆ—ர்]

சாகித்திய மண்டல தமிழிலக்கிய விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் முக்கிய இடம் பெற்றிருந்தது, பரிசு பெற்றோரைப் பாராட்டும் வைபவம். இவ்வாண்டு இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்ற எழுத்தாளர்களும், பல அறிஞர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

'பரிசு பெற்றோர் பாராட்டப்படுவர்' எனத் தலைவர் அறிவித்துவிட்டு உட்கார்ந்ததும், முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் பிரேம்ஜி எழுந்து ஏதோ பேசினர். தலைவர் அவரை மேடைக்கு அழைக்கவே, அங்கே சென்று ஏதேதோ பேசத் தொடங்கினர்.

'நிகழ்ச்சி நிரலில் இடம் பெருத ஒருவரான பிரேம்ஜியைப் பேசுவதற்குத் தலைவர் அனுமதித்தால், தன்னையும் அவ்வாறு பேசுவதற்கு தலைவர் அனுமதிப்பீரா?' என்று கேட்டார் வித்துவான் வேலன்.

இப்படி இவர் கேட்டாரோ இல்லையோ, முற்போக்குச் சங்கத்தவர்களுக்கு வந்து விட்டது ஆத்திரம். 'வேலன் இரடா' என்று கத்தினர்கள். சிலர் அவரைத் தாக்குவதற்காகச் சென்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில், சாகித்திய மண்டல உறுப்பினரான ஜனுப் முகம்மது சமீம் மேடையில் ஏறி, சாகித்திய மண்டலம் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து விட்டது என்று குற்றஞ் சாட்டினர்.

சபையிலிருந்த முற்போக்கு எழுத்தாளர்களும் அவர்களால் அழைத்து வரப்பட்ட கொம்யூனிஸ்ட் கட்சி, சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆகியவற்றின் அங்கத்தவர்களும் வேண்டுமென்றே கூச்சல் போட்டார்கள்.

திரு. டொமினிக் ஜீவா கதிரைகளைத் தூக்கி எறியத் தொடங்கினர். யாழ். பிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியரான திரு. சுப்பிரமணியம் என்பவர், டொமினிக் ஜீவாவைத் தொடர்ந்து கதிரைகளை வீசும் பணியை மேற்கொண்டார்.

மேடையிலிருந்த திரு. சம்பந்தன், திரு. தேவன் ஆகியோர் மீது முட்டைகள் வீசப்பட்டன.

திருவாளர்கள்: இளங்கீரன், நீர்வை பொன்னையன், ரகுநாதன், பெனடிக் பாலன், பிரேம்ஜி, சில்லையூர் செல்வராசன், அகஸ்தியர், டானியல் முதலானேர் கூச்சலிடத் தொடங்கினர்.

மேடைக்கருகாமையில் இப்படி அமளிதுமளி நடந்து கொண்டிருந்த போது ஒரு மூலையில் நின்ற திரு. யோகநாதன் என்பவர், யார் யாருக்கு முட்டைகள் வீச வேண்டும் என்பதை விளக்கி அடையாளம் காட்டிக் கொண்டு நின்ருர். ஈழத்துச் சோமு, சொக்கன், நந்தி முதலியோர் குழப்பம் விளைவித்துக் கூச்சல் போட்டவர்கட்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துக் கொண்டு நின்ருர்கள். எல்லாவற்றையும் இட்ட மிட்டு வழி வகுத்துக் கொடுத்ததாகக் கூறப்படும். திரு. கார்த்திகேசு சிவத்தம்பி, பின்னல் நின்று, எல்லாம் திட்டத்தின் படி நிறைவேறுகின்றனவா என்பதைக் கண்காணித்தார்.

இந்தக் குழப்பத்திற்கு முழுக்க முழுக்கக் காரணமாயிருந்தவர்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களே. தங்களுக்குப் பரிசு ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற எரிச்சலினுல், திட்டமிட்டு, விழாவைக் குழப்பினுர்கள். படிப்பும், பண்பும் நிறைந்த பல யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள் வலிமையும் வசதியும் இருந்த போதிலும், எவ்வித பலாத்காரத்தையும் உபயோகிக்காது, மௌனமாக நின்றது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் 'எழுத்தாளர் கிளை' என்பது பலரறிந்த இரகசியம். கொம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் பண்பாட்டுக்கும் வெகு தூரம். இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியினர் எந்தச் சந்தர்ப்பத்திலாவது பண்பாட்டுடன், நியாய புத்தியுடன், நேர்மையுடன் நடந்து கொண்டார்கள் எனச் சரித்திரம் [illegible]

[illegible] பெறும் ஒரு விழாவை முற்போக்கு எழுத்தாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சிலர் குழப்பி, யாழ்ப்பாணத்துப் பண்பாட்டைக் காற்றில் பறக்கவிட்டு விட்டார்களே என்று வருந்தாதவர் யாழ்ப்பாணத்தில் இன்று இலரே.

(13-ம் பக்கம் பார்க்க)



அறம் காக்கும் பெண்டிர்கள், தமிழ் காக்கவும் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுகிறார் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவி திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்கள். அருகில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் அமைதியே உருவாக அமர்ந்திருக்கிறார்கள்.

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

### அட்டன், மட்டக்களப்பு மாவட்ட இடையிறுதித் தேர்வு முடிவுகள்

மட்டக்களப்பு, அட்டன் மாவட்டங்களுக்கான சுதந்திரன் பேச்சுப் போட்டியின் இடையிறுதித் தேர்வு சென்ற 13-10-63ம் திகதி நடைபெற்றது. அட்டன் இந்து மகாசபை மண்டபத்தில் திரு. இ. நாகேந்திரம் அவர்கள் தலைமையிலும் மட்டக்களப்பு அரசடி பாடசாலை மண்டபத்தில் வித்துவான் சா. இ. கமலநாதன் தலைமையிலும் போட்டிகள் நடைபெற்றன. நடுவர்களின் முடிவுக்கு இணங்க பின்வருவோர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

#### மட்டக்களப்பு மாவட்டம்

##### முதற் பரிசு

குஞ்சித்தம்பி நடேசபிள்ளை, 1ம் குறிச்சி, பெரிய கல்லாறு. பாடசாலை: பாத்திமா கல்லூரி, கல்முனை.

விடயம்: 'நமது பொருளாதாரம் உயர.'

##### இரண்டாம் பரிசு

க. பாக்கியராசா, ஆரைப் பற்றை மகாவித்தியாலயம், காத்தான்குடி.

விடயம்: 'நமது பொருளாதாரம் உயர'

##### மூன்றும் பரிசு

எம். மீரா முகைய்தீன், சம்மாந்துறை மகாவித்தியாலயம், சம்மாந்துறை.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

பின்வருபவர்கள் பாராட்டிற்குரியவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

வி.க. வேலுப்பிள்ளை, ஆரைப்பற்றை, காத்தான்குடி. பாடசாலை: ஆரைப்பற்றை மகாவித்தியாலயம், காத்தான்குடி.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

பூமார் சின்னத்தம்பி, 1ம் பிரிவு, மண்டூர்.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

மா. இருநாவுக்கரசு, குருக்கள் மடம், மட்டக்களப்பு. பாடசாலை: சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

#### அட்டன் மாவட்டம்

##### முதற் பரிசு

மு. இராசரத்தினம், புனித யோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன்.

விடயம்: 'காந்தி அண்ணல்.'

##### இரண்டாம் பரிசு

செல்வி த. கனகசுந்தரி, லேடி லோங்டன்ஸ் டிரைவ், கண்டி. பாடசாலை: உயர்தர மகளிர் பாடசாலை, கண்டி.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

##### மூன்றும் பரிசு

ரெக்ஸ் எட்வேட், 33/16 மாவில்மட ரோட், கண்டி. பாடசாலை: புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

பின்வருபவர்கள் பாராட்டுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

செல்வி புஷ்பதேவி மாரிமுத்து, 'மாரிஸ்டன்' கெந்த கொல்லை, மாத்தளை. பாடசாலை: உயர்தர மகளிர் பாடசாலை, கண்டி.

விடயம்: 'நமது பொருளாதாரம் உயர.'

க. வி. ஜோன் டேவிட், ஹைலன்ட்ஸ் கல்லூரி, அட்டன்.

விடயம்: 'இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை.'

வி. சிறிதரன், பனியக் கடை வீதி, பூண்டுலோயா. பாடசாலை: தமிழ் மகாவித்தியாலயம், பூண்டுலோயா.

விடயம்: 'பாரதிக்குப் பின்......'

எம். வாமதேவன், ஹைலன்ட்ஸ் கல்லூரி, அட்டன்.

விடயம்: 'பாரதிக்குப் பின்......'

செய்யது இப்றாகிம், அர்ச். மாரியாளின் பாடசாலை, கொழும்பு.

விடயம்: 'பாரதிக்குப் பின்......'

இது புதிது!
இது முதல்தரமானது!
ஹன்சயா
கல்வனைஸ்ட் தகர வாளிகள்



★ இலங்கையில் செய்யப்பட்டது
★ பாவனைக்குச் சிறந்தது
★ சிக்கனமானது

'அன்னம்' அடையாள கல்வனைஸ்ட் வாளிகளையே தேருங்கள்.

செண்ட் அந்தனீஸ் இண்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதக் கலவரம் தலைவிரிகோலம்

## மறம் கொண்ட இளைஞர்களின் திறம் மிக்க செயல்

### அரங்கம் 15

அயர்நாட்டில் ஆங்கில ஆட்சியின் தலைமன்னராக இருந்தவர் 27-5-1922ல் தென் அயர்நாட்டுப் பாராளுமன்றத்தை—இரண்டாவது தோள் அயரினைக் கலைத்துப் புதிய தேர்தலை 16-6-1922ல் நடாத்த வேண்டும் எனப் பிரகடனப்படுத்தினார். தேர்தலில் போட்டியைத் தவிர்ப்பதற்காக டி வேலராவும் மைக்கேல் கொளின்ஸும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற் கட்சி, விவசாயிகள் சங்கம், இணையாளர்கள் கட்சி ஆகியவையும் தேர்தலில் போட்டி போட முன்வந்தன.

ஒப்பந்தத்தின் நிமித்தம், டி வேலரா தம்மைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாது கொளின்ஸைச் சார்ந்தவர்களுக்கும் வாக்களிக்கும்படி கூட்டங்களில் கேட்டுக் கொண்டார். ஆனால்

காயப்பட்ட கத்தோலிக்கர்கள் வைத்தியசாலையில் இருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு ஒரு புரட்டஸ்தாந்தக் குண்டர் கூட்டம் வைத்தியசாலையை நோக்கிப் புறப்பட்டது. வைத்தியசாலையைச் சூழ்ந்து நின்று படைத்துப்பாக்கிகளாலும் சுழல் துப்பாக்கிகளாலும் சாளரங்களை நோக்கிக் குண்டர்கள் சுட ஆரம்பித்தனர். வைத்தியர்களும் தாதிகளும் நோயாளிகளைக் கட்டில்களுக்குக் கீழே ஒளித்து வைத்தனர். ஆனால் இந்த நிகழ்ச்சிக்குப் பின் வைத்தியசாலையிலிருந்த கத்தோலிக்கர்களும் பயத்தினால் வைத்தியசாலையை விட்டுப் புறப்பட்டனர். கத்தோலிக்கர்கள் அனைவ

நிலைப் பிராந்தியம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவது தோள் அயரினுக்கான தேர்தல் 16-6-1922ல் நடைபெறவிருந்தது. அன்று காலைதான் புதிய யாப்புமுறை பத்திரிகைகளில் வெளியாகியது அயர் சுதந்திர மாநிலத்தின் ஆட்சி அநேகமாக ஆங்கில மன்னரிடமே இருக்குமெனவும் மன்னரின்

'சோமகன்'
'மாமல்லன்'

பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் (கவர்னர் ஜெனரல்) ஒருவர் இருப்பார் எனவும் தென் அயர்நாட்டுப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் அனைவரும் தாம் ஆங்கில மன்னருக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்ய வேண்டும் எனவும் அந்த யாப்புமுறையில் இருந்தது.

காலைப் பத்திரிகைகளைப் படித்தவர்கள் குடியரசுவாதிகளுக்காக வாக்களித்தனர். ஆனால் நாட்டுப்புறங்களில் இருந்தவர்கள் அந்தப் பத்திரிகைகளைக் கண்ணால் காணவில்லை. அதனால் அவர்களில் பெரும்பான்மையோர் நல்ல ஒரு யாப்புமுறை கிடைக்கும் என்ற எண்ணத்துடன் கொளின்ஸின் கட்சிக்கே வாக்களித்தனர். 24-6-1922ல் தேர்தல் முடிவுகள் வந்தபொழுது, 58 ஒப்பந்த சார்பு வேட்பாளர்களும் 36 குடியரசுவாதிகளும் 17 தொழிற்கட்சி வேட்பாளர்களும் 7 விவசாயிகள் கட்சி

யினர் விருப்பம் தெரிவித்தனர். இதை ஆராய்வதற்காக அ. கு. இராணுவம் ஒரு துணைக் குழுவை நியமித்தது.

இவ்வேளையில் இங்கிலாந்திலிருந்த இரண்டு அயர் இளைஞர்கள் புரிந்த வீரச் செயல் அயர்நாட்டின் சரித்திரத்தையே வேறொரு திசையில் திருப்பியது என்றால் மிகையாகாது. அள்ஸ்ரரைச் சேர்ந்தவரும் பிரித்தானியப் பேரரசின் யுத்த ஆலோசகருமான பீல்ட் மாஷல் சேர் ஹென்றி வில்சனை அவரது வீட்டு வாசலின் வைத்தே 22-6-1922ல் இந்த இரு இளைஞர்களும் சுட்டுக் கொன்றனர். இக் கொலைக்கும் குடியரசுக் கட்

16 கார்களைப் பறிமுதல் செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. பெல்பஸ்ற்றில் தயாரிக்கப்பட்டுத் தென் அயர்நாட்டில் பகிஷ்கரிப்புக்கு உள்ளாகும் கார்கள் 16ஐப் பறிமுதல் செய்து கொண்டிருந்த வேளையில் குடியரசு இராணுவ அலுவலர் லெயோ ஹெண்டசன் இடைக்கால அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு மௌன்ற் ஜோய் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இந்த அலுவலரை விடுவிக்கும் நோக்கத்துடன் குடியரசுவாதிகள் ஒப்பந்த சார்புச் சேனையின் உதவித் தண்டநாயகர்களில் ஒருவரான தளகர்த்தர் ஓ கொனலைக் கைது செய்து நான்கு முன்றில்களில் தடுப்புக் காவலில் வைத்தனர்.

ஆங்கில ஆட்சியினரைச் சமாதானப் படுத்த வேண்டுமானால் ஓ கொனலைக் கைது செய்ததைக் காரணமாகக் கொண்டு நான்கு முன்றில்களைத் தாம் தாக்குவதே ஒரே வழி எனக் கொளின்

## இராணுவத்தினர் அட்டகாசம்

கொளின்ஸோ அவ்வாறு கேட்காது தம் கட்சி உறுப்பினருக்கே வாக்களிக்கும்படி பிரசாரம் செய்தார்.

தென் அயர்நாட்டில் தேர்தல் காய்ச்சல் காயும் இவ்வேளையில் வட அயர் நாட்டில் இனக் கலவரக் காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தது. இக் கலவரத்தை வட அயர்நாட்டு அரசாங்கமே தூண்டியதுமட்டுமல்லாது, கொண்டும் நடாத்தியது. இதைக் கட்டுப்படுத்தும் முகமாக அள்ஸ்ரரிலிருந்த அயர் குடியரசு இராணுவம் பல வழிகளைக் கையாண்டது. அந்த இராணுவத்தின் நடவடிக்கைகளுக்காகத் தென் அயர்நாட்டிலுள்ள ஒப்பந்த சார்புச் சேனையும் ஒப்பந்த எதிர்ப்புச் சேனையும் ஒன்றுகூடி இரகசியமாக ஆயுதங்களை அனுப்பின.

அள்ஸ்ரரிலிருந்த அயர் குடியரசு இராணுவத்தினர் வெற்றுப் பண்டகசாலைகளுக்கும் குடிகளில்லா மாளிகைகளுக்கும் புகைவண்டி நிலையங்களுக்கும் அரசாங்கத்தின் சொத்துக்களுக்கும் நெருப்பு வைத்து வந்தனர். அவசியம் ஏற்பட்டாலன்றி அள்ஸ்ரர் இராணுவத்தினரையோ பொலிஸாரையோ இவர்கள் கொல்வதில்லை. 31-5-1922ல் இரண்டு விசேடப் பொலிஸாரை பெல்பஸ்ற்றில் இவர்கள் சுட்டுக் கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்த இரண்டு கொலைகளையும் காரணமாகக் கொண்டு விசேடப் பொலிஸார் இரவு நேரங்களில் கத்தோலிக்கர்களின் வீடுகளில் புகுந்து கண்டபடி யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டனர்; வீடுகளுக்கு நெருப்பு வைத்தனர்; பயந்து ஓடிய அகதிகளை ஈன இரக்கமின்றிச் சுட்டுக் கொன்றனர்; நடக்கவோ ஓடவோ முடியாத வயோதிபர்களையும் பாலகர்களையும் இந்தப் பொலிஸார் தம் துப்பாக்கிகளுக்கு இரையாக்கினர். கத்தோலிக்கர் வீடுகளிலிருந்த புரட்டஸ்தாந்தர்களும் இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். காயப்பட்ட அனைவரும் ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபொழுது அங்கு இடமிருக்கவில்லை, கடும் காயமுற்றவர்களே அனுமதிக்கப்பட்டனர்.

ரும் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர்.

வந்தேறு குடிகளால் இம்சிக்கப்பட்டு, வீடுகளிலிருந்து துரத்தப்பட்ட கத்தோலிக்கர்கள் உடுத்த உடைகளோடு, உண்ண உணவின்றி, பனியிலும், மழையிலும், பரிதவித்து மேடு பள்ளங்களையும் ஆறுகளையும் ஓடைகளையும் கடந்து டப்ளினை நோக்கி யாத்திரை செய்யலாயினர். டப்ளினையடைந்த இவர்களை அயர் குடியரசு இராணுவத்தினர் வரவேற்று வசிக்க வீடுகளும் உண்ண உணவும் கொடுத்து உதவினர். 21-6-1920 தொடக்கம் 18-6-1922

## யுத்த ஆலோசகர் படுகொலை

சிக்குமோ அன்றி அயர் குடியரசு இராணுவத்திற்குமோ எவ்வித தொடர்புமிருக்கவில்லை. எனினும் அ. கு. இராணுவத்தினரே குற்றவாளிகள் எனக் கூறியும், அவர்களுக்கெதிராக இடைக்கால அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டும், அவ்வாறு எடுக்காவிட்டால் ஆங்கிலேயருக்கும் ஆதர் கிரிபித்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாதெனத் தாம் முடிவு செய்வதுடன் உடனடியாகப் போரொன்றை ஆரம்பிக்கவும் தாம் தயங்கப் போவதில்லையெனவும், ஆங்கில ஆட்சி

ளின் தலைமையிலுள்ள இடைக்கால அரசாங்கம் இரகசியமாகத் தீர்மானித்தது. எனினும் 27-6-1922ல் இந்தச் செய்தி அ. கு. இராணுவத்தினருக்குக் கிடைத்தது. நான்கு முன்றில்களிலுள்ள குடியரசு இராணுவத்தினர் போராட்டத்திற்குத் தயாரானார்கள். ஆனால் ஆக்கிரமிப்பு எப்பொழுது வரும் என மட்டும் அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

அடுத்த நாள் இரவு 1-00 மணிக்குச் சற்றுப் பின்னர் இடைக்கால அரசாங்கத்தின் படைகள் நான்கு முன்றில்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது. இதைக் கண்ட அ. கு. இராணுவத்தினர் தம்மைத் தயார் செய்தனர். குடியரசு இராணுவத்தினர் விடியற்காலை 4-00 மணிக்கு முன்னதாகச் சரணடைய வேண்டும் என இடைக்கால அரசாங்கத்தின் இராணுவத் தளபதி 3-40க்கு ஒரு குறிப்பை நான்கு முன்றில்களுக்கும் அனுப்பிவைத்தார்.

(வளரும்)

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

வரை இனக்கலவரத்தின் காரணமாக அள்ஸ்ரர் மாகாணத்தைவிட்டு வெளியேறிய அகதிகள் 23,000 பேர்; தொழிலற்றுப் போனவர்கள் 8,750 பேர்; குண்டர்கள் கைகளாலும் ஆட்சியினரின் கைகளாலும் காயமடைந்தவர்கள் 1766 பேர்; மரணமடைந்தவர்கள் 428 பேர்!

இந்த இனக்கலவரத்தைக் காரணமாகக்கொண்டு வட அயர்நாட்டில் முகாமிட்டிருந்த ஆங்கில இராணுவம் எல்லைப் புறத்திலிருந்த கத்தோலிக்கச் சிற்றூர்களை நிர்மூலமாக்கிக் கொண்டு வந்தது. இந்த அட்டூழியத்தைப் பொறுக்க முடியாமல் கொளின்ஸ் லொயிட் ஜோர்ஜிடம் முறையிட்டார். இந்த முறையீட்டின் காரணமாக வட அயர்நாட்டுக்கும் தென் அயர்நாட்டுக்கும் இடையிலுள்ள எல்லையின் இரண்டு பக்கத்திலும் "நடு

யினரும் 4 இணையாளர்களின்றி கல்லூரித் தொகுதிக்கும் 6 சுயேச்சையாளர்களும் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிய வந்தது. கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டியது அடுத்த பணியாகியது.

### அரங்கம் 16

அயர்நாட்டு இராணுவத்தை ஒற்றுமைப்படுத்துவது பற்றி ஒப்பந்த சார்புச் சேனையைச் சார்ந்த 4 தலைவர்களும் ஒப்பந்த எதிர்ப்புச் சேனையைச் சார்ந்த 4 தலைவர்களும் பேச்சுவார்த்தைகள் நடாத்தி வந்தனர். எனினும் எவ்வித பலனும் கிட்டவில்லை. இந்நேரத்தில் டப்ளினிலுள்ள பீனிக்ஸ் பூங்காவில் முகாமிட்டுக் கொண்டிருக்கும் பிரித்தானிய இராணுவத்தினரை அ. கு. இராணுவத்தினர் தாக்கி அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என அ. கு. இராணுவத்தில் ஒரு பகுதி

யினர் இடைக்கால அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை அனுப்பினர்.

நான்கு முன்றில்களில் இருக்கும் அ.கு. இராணுவத்தினரே குற்றவாளிகள் என்பதை நிரூபிக்கும் சாட்சியங்களைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு இடைக்கால அரசாங்கம் ஆங்கிலேயரைக் கேட்டது. எனினும் அவர்கள் அவற்றைக் கொடுக்க மறுத்துவிட்டனர் கொடுப்பதற்குச் சாட்சியங்கள் இருக்க வேண்டாமா?

சேர் ஹென்றி வில்சனின் கொலை, அள்ஸ்ரரில் மீண்டும் இனக் கலவரம் ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருக்கும் என அ. கு. இராணுவம் எண்ணியது. இராணுவத்தின் பெரும் பகுதியொன்றை அள்ஸ்ரருக்கு அனுப்ப வேண்டும் எனத் தீர்மானித்தது. தேவையான இராணுவத்தினரைக் கொண்டு செல்வதற்காக

## பகிஷ்கரிப்புக்கு இலக்கான கார்கள் பறிமுதல்

ஆரோக்கியாமிருதலேஹம்

மலபந்தம், பசியின்மை, வயர்விர்பு, மூல ரோகம், சொறி சிரங்குகள், குஷ்டம், இருமல், குன்மம், இடுப்பு வலி, வாதம் முதலிய வியாதிகளை விரைவில் சுகப்படுத்துகிறது. இம் மருந்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நாட்பட்ட மலச்சிக்கலை நீக்கி இரத்த விருத்தியும் பலமும் கொடுக்கிறது. பிரதி தினமும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

விலை : ¼ ரூ. 2-00, ½ ரூ. 3-50, 1 ரூ. 6-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET COLOMBO 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஒக்டோபர் மாதம் 20ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1163

# திருமலை இடைத் தேர்தல்

திருகோணமலை இடைத் தேர்தலுக்கு இவ்வாரம் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சி வேட்பாளருடன் இரு சுயேச்சைகள் போட்டி போடுகின்றனர். அவர்களில் ஒருவர் சிங்களவர்.

ஆளும் கட்சியும், ஐ. தே. கட்சியும், இடதுசாரி முன்னணியும் இடைத் தேர்தலில் போட்டியிடப் போவதாக வதந்திகள் அடிபட்டன. ஆனால் திருமலையோ எட்டாத பழம். எனவே பின்வாங்கிவிட்டன அக்கட்சிகளெல்லாம்.

கடந்த தேர்தலில் இங்கே ஆளும் கட்சி நல்ல உதை வாங்கியது. சூடுபட்ட பூனையல்லவா? இடைத் தேர்தலை எண்ணிக் கூடப் பார்க்கவில்லை.

ஐ. தே. கட்சித் தலைவர் ஆள்பிடிக்கத் திருமலை சென்றதாகச் செய்திகள் கூறின. இறுதியில் அவரும் வெற்றிகரமாகப் பின்வாங்கினர்.

இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் ஆசை ஏற்பட்டது. திருமலையில் கைவரிசையைக் காட்டுமாறு முன்னணிக்குச் சவால் விட்டன சிங்களத் தினசரிகள். இறுதியில் முன்னணியும் மூச்சுவிடவில்லை. ஆயினும் இக் கட்சிகள் "பாதாள வேலைகள்" சில செய்யக் கூடும்.

கடைசியில் இரு சுயேச்சைகள் மட்டுமே முன்வந்தனர். அதில் ஒருவர் சிங்கள வாக்குகளை நம்பியவர். மற்றவரோ தமிழ் வாக்குகளை இரு கூருக்கலாம் எனக் கனவு காண்பவர். தமிழ் வாக்குகள் பிளவுபட்டால் சிங்கள வாக்குகளை நம்பி நிற்பவர் வாகைசூடுவார் என்பது அவர் திட்டமாம்.

நிலையற்ற கொள்கை, கட்டுப்பாடற்ற போக்கு, மணிக்கு மணி மாறும் மனப்பாங்கு—இவைகள்தான் சுயேச்சைகளின் இலட்சணங்கள். ஆகையால்தான் இவர்களை "மூன்று தலைக் கழுதைகள்" என்றார் ஒருவர் பாராளுமன்றத்தில்.

கட்சி அரசியல் வளர்ந்துள்ள இந்நாளில் சுயேச்சைகளுக்கு இடமேது! தனி மரமாக நின்று எதையும் சாதிக்க முடியாதே! சுயேச்சைகளை இன்று மக்கள் நிராகரிப்பதற்கு இதுதான் காரணம்.

ஊர்காவற்றுறைச் சுயேச்சைக்கு ஏற்பட்ட கதியிலிருந்து திருமலைச் சுயேச்சைகள் தப்பிவிட முடியாது.

உரிமைப் போராட்டம் பொங்கிவரும் வேளையிலே தேர்தல் களத்தில் தமிழரசார் குதித்ததேன்?

திருமலை மாவட்டம் ஆக்கிரமிக்கப்படுகிறது. சிங்களக் குடியேற்றம் தீவிரமடைந்துள்ளது. அங்கே சிங்களவர்களின் நெருக்குதல் மிக மிக அதிகம். "ஒரு சில ஆண்டுகளில் திருமலைச் சீமையை அபகரித்துவிட வேண்டும், சிங்களவர்களைப் பெரும்பான்மையோராக்கி விடவேண்டும்" என்று திட்டமிட்டுக் குடியேறுகின்றனர் சிங்களவர். எனவே திருமலை மாவட்டம் பறிபோகாது தடுத்து, தமிழ் பேசும் மக்களுக்குப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும். இதுவே கட்சி இத்தேர்தலில் போட்டியிடுவதின் முக்கிய நோக்கம்.

தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமைக்காக போராடத் தயார் என்பதை மறுபடியும் ஆட்சியாளருக்கும் அகில உலகிற்கும் எடுத்துக்காட்ட வேண்டும் திருமலை மக்கள். அத்தகைய ஒரு வாய்ப்பை அவர்களுக்கு அளிப்பதே இந்த நெருக்கடியான நேரத்திலும் கூட கட்சி தேர்தல் போராட்டத்தை நடத்துவதின் நோக்கம்.

திருமலை ஈழத் தமிழகத்தின் இதயம். பத்தாண்டுகளாகக் கட்சிப் பாசறையாக விளங்கிய பகுதி. திருமலை ஜோதி அமரர் இராஜவரோதயம் பிரதிநிதியாகப் பணியாற்றிய தொகுதி. அத்தகைய புண்ணிய பூமி தமிழ் பேசும் மக்கள் இழந்துவிட்ட சனநாயக உரிமைகளையும் சுதந்திரத்தையும் திரும்பப்பெற வழிகாட்ட வேண்டும். அதற்காகவே திருமலையில் போட்டியிடுகிறது தமிழரசுக் கட்சி.

'சத்தியாக்கிரகம் தோல்வி — கட்சிக்குச் செல்வாக்கு மங்கிவிட்டது' என்றெல்லாம் மனப்பால் குடித்தவர்களுக்குச் சாட்டையடி கொடுத்தது மூதூர் இடைத் தேர்தல். பகிஷ்கார இயக்கத்துக்கு அனுமதி வழங்கியது ஊர்காவற்றுறைத் தேர்தல். திருமலைத் தேர்தலோ தமிழ் மண்ணைச் சிங்களப் பிடியிலிருந்து மீட்கத் தமிழ் பேசும் மக்கள் தயார் என்பதைச் சிங்கள மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

திருமலை தந்த மாமலை அமரர் இராஜவரோதயத்தின் ஆசனத்தில் அமரத் தகுதியுடையவரே தமிழரசு வேட்பாளர் திரு. மாணிக்கராசா. பண்பாலும், பணியிலும் சிறந்து விளங்கும் திரு. மாணிக்கராசா திருமலை ஜோதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்பவர். அவர் பாராளுமன்றத்திலே தனித்து நின்று போராடப் போவதில்லை. அங்கே ஒரு தமிழரசுப் படையே உண்டு. அவர்களுடன் சேர்ந்து நின்றே உரிமைக் குரலெழுப்புவார்.

தமிழ் பேசும் மக்கள் என்றும் தனி மனிதனைப் போல ஒரே குரலில் பேச வேண்டும். அதற்கான ஒரே வழி திருமலையும் தமிழரசு வேட்பாளரைத் தெரிவு செய்வதே.

தமிழரசுக் கட்சியே என்றென்றும் தங்களின் பிரதிநிதி என்பதை மீண்டும் பிரகடனம் செய்ய திருமலைத் தமிழ் பேசும் மக்களுக்கு இதோ ஒரு வாய்ப்பு கிட்டியுள்ளது! "வாய்ப்பைப் பயன்படுத்தி, கட்சி வேட்பாளரையே தெரிவு செய்யுங்கள்" என்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அதைச் செய்தால் மட்டுமே அமரர் இராஜவரோதயத்தின் ஆன்மா சாந்தியடையும் என்பதை திருமலை மக்களுக்கு நாம் கூற வேண்டுமா?

# ஆளடையாள அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றலாம்

## கல்லூரி முதல்வர்களுக்கு பரீட்சை ஆணையாளர் அறிக்கை

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது உயர்தர பாடசாலைப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பிரதம அஞ்சல் அதிபரிடமிருந்து பெறும் ஆளடையாள அட்டையின்றிப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆளடையாள அட்டைகள் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுவதால், மாணவர்கள் ஆளடையாள அட்டை பெறுது புகைப்படத்தின் பின் புறத்தில் கையொப்பமிட்டு கல்லூரி முதல்வரின் கையொப்பத்துடன் பரீட்சைக்குத் தோற்றலாம்.

டிசம்பர் 1963 முதல் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை அல்லது உயர்தர பாடசாலைப் பத்திரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் கல்லூரி மாணவர்கள் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். முன்னர் வெளி மாணவர்கட்கு மட்டுமே இந்தக் கட்டுப்பாடு இருந்து வந்தது. ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்கு பிரதம அஞ்சல் அதிபரிடமிருந்து பெறும் ஆளடையாள அட்டையை உபயோகித்து வருவது வழமையாக இருந்து வந்தது. கடந்த சில மாதங்களாகப் பிரதம அஞ்சல் அதிபர் வழங்கும் ஆளடையாள அட்டைகள் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுவதால் மாணவர்கள் பெரிதும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பிரதம அஞ்சல் அதிபரிடமிருந்து பெறும் ஆளடையாள அட்டையை மட்டுமே சமர்ப்பிக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை.

இதுபற்றி பரீட்சை ஆணையாளர் கல்வித் திணைக்களத்திலிருந்து 1—4—63ல் அரசாங்க, மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி அதிபர்களுக்கு அனுப்பிய சுற்று நிருபத்தில் இது பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார். ஒரு பரீட்சாதி தனது கையொப்பம், முழுப்பெயர் ஆகியவற்றுடன் கல்லூரி முதல்வரும் கையொப்பமிட்ட நிழல் படம் ஒன்றைச் சமர்ப்பித்தாலே ஆளடையாளம் போதுமானதாகும்.

கல்வித் திணைக்களத்திலிருந்து அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தின் தமிழாக்கம்:-

இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (சாதாரணம்) உயர்தர பாடசாலைப் பத்திரப் பரீட்சை அல்லது சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (உயர்தரம்) ஆகிய பரீட்சைகளுக்குத்தோற்றும் கல்லூரிமாணவர்கள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப் படுத்த வேண்டும்.

இதை உறுதிப் படுத்துவதற்குக் கீழ்காணும் சாதனங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

1. பிரதம அஞ்சல் அதிபரிடமிருந்து பெறும் ஆளடையாளச் சீட்டு.
2. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து வழங்கப்படும் கடவுச் சீட்டு (பாஸ்போட்) அல்லது தற்காலிகச் சான்றிதழ்
3. பரீட்சை நடைபெறும் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் அரசாங்க திணைக்களமோ, பொதுக் கூட்டுத்தாபனமோ அல்லது நியதிச் சட்ட திறுவனமோ வழங்கிய உத்தரவுச் சீட்டு அல்லது வேறு பத்திரம் — பரீட்சாதியின் புகைப்படத்துடன்
4. பின்வரும் குறிப்புக்களுடன் ஒரு கடவுச் சீட்டு அளவு புகைப்படம்:

(அ) விண்ணப்பகாரரின் கையொப்பம்.

(ஆ) விண்ணப்பகாரரின் முழுப் பெயர்.

(இ) கல்லூரியின் பெயரும் முகவரியும்.

(ஈ) கல்லூரி அதிபரின் பெயர்.

(உ) கல்லூரி அதிபரின் கையொப்பம்.

(ஊ) திகதி.

இப்புகைப்படத்தில் கல்லூரி அதிபர் அல்லது தலைமையாசிரியர் மட்டுமே கைச்சாத்திடலாம். உதவி ஆசிரியர்கள் கையொப்பமிடக் கூடாது. இப் புகைப்படம் பரீட்சைப் பொறுப்பாளரிடம் சேர்க்கப்பட வேண்டும்.

# தீண்டாமைக்கு சாவுமணி அடிக்கும் பாதயாத்திரை

## சாதிப் பூசலுக்கு கொம்யூனிஸ்டுகள் சப்பைக்கட்டு

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றிகரமாக நடைபெறும் பாத யாத்திரை பலருக்குப் பெரும் தலை வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாகக் கொம்யூனிஸ்டுகளுக்குத்தான் பாத யாத்திரையால் பெரும் சங்கடம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பாத யாத்திரையின் போது சிறுபான்மைத் தமிழர்களில் பெரும்பான்மையோர் தமிழரசுத் தலைவர்களுடனும் சரிசமமாகத் தலை நிமிர்ந்து கலந்துறவாடுவதைக் காண வட பகுதிக் கொம்யூனிஸ்டுகளுக்கு குலை நடுக்கம் ஏற்பட்டு வருகிறதாம்.

தீண்டாமை, சாதிப் பிரச்சினை ஆகியவற்றையே மூலதனமாக வைத்துக் கொண்டே கட்சி வளர்க்க முனைந்தவர்களுக்கு, தமிழரசுப் பாத யாத்திரையினால் சாதிச் சனுதனக் கோட்டை சரிந்து விழுவதைக் காணப் பொறுக்கவில்லை. அப்பாவி மக்களை ஏய்த்துக் கொண்டு, அவர்களுடைய உயர்ச்சிக்காகவே பாடுபடுகிறோம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிந்தவர்களுக்குப் பாத யாத்திரையினால் சாதிப் பிரச்சினைக்குச் சாவு மணி அடிக்கப்படுவதைக் காணப் பொறுக்கவில்லை.

பாத யாத்திரையை எது வகையிலும் தடுத்து விடவும், சிறுபான்மைத் தமிழர்களைப் பாத யாத்திரையில் ஈடுபடாமலுமிருக்க வைக்க பகீரதப்பிரயத்தனங்கள் செய்து வருகிறதாக நமக்கு நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒரு கிராமத்தினூடாகப் பாத யாத்திரை செல்லுகையில் மக்கள் ஆரவாரித்து அளவிலா ஆனந்தத்துடன் வரவேற்பளித்தனர். இதே வேளையில் ஒரு இடத்தில் மட்டும் இரண்டு கறுப்புக் கொடிகள் பறக்கக் காணக் கூடியதாகவிருந்தது.

சாதிப் பிரச்சினை தீர்ந்து விட்டால், தங்களுக்கு வளர்ச்சி கிடையாதே என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பகுதியில்

# பட்டாளத்தினர் அட்டகாசம்

## தனிவழி செல்வோர் கள்ளத்தோணியாம்

யாழ்ப்பாணப் பகுதியில் பொலிசாரினதும் இராணுவத்தினரதும் அட்டூழியங்கள் மோசமாகி வருகிறது. குறிப்பாக கிராமப் புறங்களில் தனிவழி செல்லும் மக்களைக் கள்ளத்தோணி என்று கூறித் துன்புறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களாம். என்றாலும் பொது மக்கள் இவர்களினது பயமுறுத்தல் கண்டு அஞ்சுவதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கிராமப்புறங்களான காரைநகர், மூளாய், சுழிபுரம், மாதகல், காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இரவில் தனிவழி செல்லும் பொது மக்களைப் பொலிசாரும், இராணுவத்தினரும் இடைமறித்து 'கள்ளத் தோணியா' என்று கூறித் துன்புறுத்த முயற்சிக்கிறார்களாம். கள்ளத்தோணியைத் தடை செய்வதற்காகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள காவல் முகாம்களிலுள்ள இராணுவவீரர்களே பெரும்பாலும் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


பொது மக்கள் கடந்த காலங்களில் இராணுவவீரர்களைக் கண்டு அஞ்சுவது போல், இப்பொழுதும் அவர்களைப் பயமுறுத்திவிடலாம் என்று இவர்கள் எண்ணுகிறார்களாம். என்றாலும் பொது மக்கள் இராணுவ வீரர்களின் நடவடிக்கை கண்டு அஞ்சுவதாகத் தெரியவில்லை.

இதே போன்று மன்னார், வவுனியா மாவட்டங்களில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழர்களை கள்ளத் தோணி என்று கூறித் தினமும் நூற்றுக்கணக்கானவர்களை இராணுவத்தினர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அமுலில் மாற்றம் ஏற்படுமா?



கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திரு. இ. அம்பிகைபாகன் தலைமையில் சுழிபுரம் பெரிய தம்பிரான் கோவில் வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாளைய மூதவை உறுப்பினர் திரு. ஞா. நல்லையா, உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம், மல்லாகம் வழக்கறிஞர் திரு. சு. நடராசா ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருப்பதையும் காண்க.

படம்: நாதன்

## பாத யாத்திரை மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவாலியிலிருந்து பிற்பகல் நாலு மணியளவில் புறப்பட்ட பாத யாத்திரைக் குழு நவாலி தெற்கை வந்தடைந்ததும் திரு. கே. எஸ். போல் தலைமையில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ஞானவைரவர் கோவிலடியில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இங்கிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழு ஆறு மணியளவில் சங்கரத்தைக் குளத்தடியை வந்தடைந்ததும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இரவு பத்து மணியளவில் இராப் போசனம் அளிக்கப்பட்டது.

இங்கட்கிழமை காலை துணவியிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழு அராலி வடக்கைப் பத்து மணியளவில் வந்தடைந்தார்கள். இங்குள்ள சிவன் கோவிலில் சமபந்தி போசனம் நடைபெற்றது. குவளை அராலி கிழக்கு ஆலியவ றறிற் கூடாகச் சென்று பதினொரு மணியளவில் அராலி தெற்கை வந்தடைந்தனர். இங்கு ஊர் மக்களால் நண்பகல் போசனம் வழங்கப்பட்டது.

அராலி தெற்கிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழு அராலி மேற்கு, வட்டுக்கோட்டைச் சந்தி, மூன்றும்பனை வயிரவ கோவிலடி வழியாக இரவு எழு மணியளவில் வட்டுக்கோட்டைச் சிவன் கோவிலை வந்தடைந்தது.

வட்டுக்கோட்டைச் சிவன் கோவிலடியில் வைத்தியக் கலாநிதி அ. குமாரசாமி தலைமையில் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அன்றைய இரவை வட்டுக்கோட்டையில் கழித்த பாத யாத்திரைக் குழு, மறுநாள் காலை பிளவத்தை வழியாகச் சித்தங்கேணியை வந்தடைந்தது.

சித்தங்கேணியில் உணவை முடித்துக் கொண்டு, வடலியடைப்பு வழியாக ஐயனார் கோவிலடியை அடைந்ததும் நண்பகல் போசனம் வழங்கப்பட்டது. ஐயனார் கோவிலடியிலிருந்து பிற்பகல் மூன்று மணியளவில் புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினர் சில்லாலை, பளிப்புலம், பண்ணாகம் வழியாகச் சுழிபுரம் கிராமத்தை அடைந்தனர். வழி நெடுகிலும் மக்கள் பூரண கும்பம் வைத்துத் தலைவர்களையும் தொண்டர்களையும் வாழ்த்தி அனுப்பினார்கள்.

சுழிபுரம் பெரியதம்பிரான் கோவிலடியில் திரு. இ. அம்பிகைபாகன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம், ஞா. நல்லையா, சு. நடராசா, வி. தர்மலிங்கம், இராசா இன்னும் பலர் ஆட்சியாளரின் சர்வாதிகாரப் போக்கை வன்மையாகக் கண்டித்தும், இடதுசாரிகளின் பிற்போக்கு நடவடிக்கைகளைச் சாடியும் உரை நிகழ்த்தினார்கள். திரு. இ. அம்பிகைபாகன் இல்லத்தில் இரவு போசனம் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டது.

புதன்கிழமை காலை சுழிபுரத்தில் இருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினர் தமது நடைமுறையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினர். தொடர்ந்து மௌனமாகச் செல்வது என்ற முடிவுடன் பாத யாத்திரை மௌன ஊர்வலமாகப் புறப்பட்டது.

சுழிபுரம் கிழக்கு வழியாகச் சென்று பண்ணாகம் நாற் சந்தி வழியாக வடக்கம்பரை அம்மன் கோவிலை அடைந்ததும் காலை உணவு அளிக்கப்பட்டது. தமிழரசு வாலிப முன்னணிக் கிளையினரால் ஒரு பொதுக் கூட்டமும் நடாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தொல்புரம் மூட்டுச் சந்தை வழியாகச் சென்று மதிய உணவைத் தொல்புரத்தில் ஏற்றனர். அதைத் தொடர்ந்து மூளாய்ப் பிள்ளையார் கோவிலடி வழியாகச் சென்று மூளாய் தெற்கை அடைந்தனர்.

மூளாய் வீதி வழியாக பாத யாத்திரைக் குழு வரும்பொழுது திரு. மு. வல்லிபுரம் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கினார். பாதை நெடுகிலும் பொதுமக்கள் வரவேற்பளித்து தொண்டர்களுக்குத் தாகசாந்தியளித்தனர். அங்கிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினர் காரை நகர் சென்றடைந்தனர்.

காரை நகர் புது வீதி வழியாகத் தொண்டர்கள் மேள வாத்தியத்துடன் அழைத்துச் செல்லப்பட்டனர். காரை நகரில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

காரை நகர் கேணியடியிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினர் தங்கோடையில் திரு. ஆ. கணபதிப் பிள்ளையின் இல்லத்தில் மதிய போசனம் ஏற்றனர். அப்பொழுது திரு. கணபதிப் பிள்ளை அவர்கள், நடைபெறவிருக்கும் அறப் போராட்டத்துக்கு ரூ. 1000/- கொண்ட பணமுடிப்பு ஒன்று வழங்கினார்.

களபூமி வழியாகச் சென்று துறைமுகப்பிள்ளை மடத்தை அடைந்தனர், அவ்விடத்தில் முன்னாளைய கிராம சபைத் தலைவர் திரு. மு. வேலுப்பிள்ளை தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. முன்னாளைய நீதியரசர் திரு கே. வி. நடராசாவின் பாரியார் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கினார். பிள்ளை மடத்தடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துடன் பாத யாத்திரை தற்காலிகமாகச் சில தினங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாத யாத்திரைக் குழுவினர் சென்ற இடமெல்லாம் இன்முகம் காட்டி இனிய மொழிபேசி குதூகலமாகப் பொது மக்களால் வரவேற்கப்பட்டனர். பாதை தோறும் பூரண கும்பம் வைத்து தலைவர்களையும் தொண்டர்களையும் ஆசிகூறி ஆதரவளித்தனர் பொதுமக்கள். நடக்கவிருக்கும் இறுதிப் போராட்டத்திற்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக விருப்பதாகவும் பல இடங்களில் மக்கள் தலைவர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளனர்.

### அராலியில் ஆலயப் பிரவேசம்

தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்ட ஒரு சமூகத்தைக் காணவேண்டுமென்பது தமிழரசுக் கட்சியின் பாதயாத்திரையின் ஒரு நோக்கமாகும். அவர்களின் நோக்கம் பல இடங்களில் வெற்றியளித்துள்ளது. சில இடங்களில் தொடர்ந்து நோக்கம் கைகூடி வருகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக 18-ம் திகதி காலை ஒன்பது மணியளவில் அராலி வடக்கு முருக மூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற அரிசனப் பிரவேசம் குறிப்பிடத்தக்கது. இம் முயற்சிக்கு வழி சமைத்த திரு. எஸ். ஜி. எல். மணி அவர்கள் பாராட்டுக்குரியவராவர்.

## மந்திரிகள் கோஷ்டி சேர்ப்பதின் எதிரொலி

ஆளும் கட்சிக்குள் புதிய உருவில் கோஷ்டி மனப்பான்மை வலுப்பெற்று வருவதாக நமது நிருபர் அறிவித்துள்ளார். தமிழ்த் தலைவர்களை தம்வசமாக்குவதற்கு மொழி விவகாரத்திலும், சிங்கள அமுலிலும் பாரதூரமான மாற்றங்களைச் செய்யப் போவதாகவும், அதனால் தமிழர் — சிங்களவர் உறவைப் பலப்படுத்தி, நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கு வழி கோலி விடலாம் என்றும் காணி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா கருத்துத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

தம்முடைய கருத்தை ஆதரிக்கும் ஒரு குழுவினரை அமைச்சர் சில்வா உருவாக்கி வருகிறாரென அறியப்படுகிறது. இக்குழு ஆட்சியைக் கைப்பற்றிவிடவும் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இயங்குமாம்.

முன்பு "சுதந்திரன்" தெரிவித்திருந்த கருத்துப்படி நிதி மந்திரி இலங்கரத்தினவும் தமக்கான ஒரு குழுவை உருவாக்கி வருவதில் பெரும் பிரயத்தனம் செய்து வருகிறார் என்றும் அரசியல் வட்டாரங்களில் செய்தி அடிபடுகிறது. அடுத்த பிரதமர் பதவியைத் தாம் அடைந்து விடவும் ஆயத்தங்கள் செய்து வருகிறாரெனவும் ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமக்கு ஆளும் கட்சிக்குள் ஆதரவு குறைந்து வருவதை நன்கு அவதானித்து விட்டார் என்றும், அடிக்கடி 'பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்' என்று பயங்காட்டியும் எது வித பலனும் கிடைக்கவில்லை என்றும் தெரிகிறது. புதிய செனட்டர்கள் தெரிவும் இந்தப்பலவீனத்தையே நன்கு வெளிக்காட்டியிருக்கிறது.

## சிவலிங்கத்தை கடலில் எறிந்தனர்

### விசாரணை வேண்டும்

திருமலைக் கோட்டையினுள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பிள்ளையார் சிலையொன்றையும் சிவலிங்கத்தையும் சிங்கள இராணுவத்தினர் சிலர் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டனராம். அதனால் ஆத்திரமடைந்த சிலர் கோட்டையினுள் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த சிறு புத்தர் சிலையொன்றை அகற்றினராம். பின்னர் புத்தர் சிலை மீட்கப்பட்டதெனினும் பிள்ளையார் சிலையும் சிவலிங்கமும் கடலோடு சென்றுவிட்டன.

சைவாபிமானிகளின் உள்ளத்தைப் புண்படுத்தும் இச் செயலைப் பற்றி உயர்தர அதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டும் பிரஸ்தாப இராணுவத்தினரின் செயலைக் கண்டிக்கவோ அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கம் முன்வரவில்லையென்று தெரிகிறது.

ஆனால் புத்தர் சிலையை அகற்றியதாக ஒரு தமிழ் இராணுவ வீரர் மீது குற்றஞ் சுமத்தி அவர் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடு செய்வதாகவும், இது சம்பந்தமாக ஒரு விசாரணைக் குழு திருமலைக்குக் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டிருப்பதாகவும் வதந்தி அடிபடுகிறது.

இம்மாதிரியான சட்ட நடவடிக்கைகளைப் பிள்ளையார் சிலையையும், சிவலிங்கத்தையும் தூக்கி ஆழ் கடலில் வீசி எறிந்தவர்கள் மீது ஏன் எடுக்கவில்லையென்று திருமலை இந்துப் பெரு மக்கள் கேட்கின்றனர்.

இதற்கு அரசாங்கம் பதிலளித்தாக வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தில் பழைய புத்தர் சிலையை வைக்காமல், அதைவிடப் பெரிய புத்தர் சிலையொன்று தற்போது வைக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் பிள்ளையார் சிலையோ, சிவலிங்கமோ அதே இடத்தில் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படவில்லையென்றும் தெரிகிறது. இச் செயலும் இந்து சமயிகளைப் புண்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## தீண்டாமைக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணத்தால் தூண்டப்பட்ட சில கொம்யூனிஸ்டுகள்தான் அக்கொடிகளைக் கட்டினராம் என்ற விபரம் தெரியவந்தது.

'உள்ளூரிலுள்ள கோயில் ஒன்றிற்குள் தீண்டாதாரைப் பிரவேசிக்க வைக்கத் தமிழரசார் முயற்சிக்கின்றனர்; எமது பழமைவாய்ந்த புனிதமான மதத்தைத் தமிழரசார் பாழடிக்கப் பார்க்கின்றனர்' என்றெல்லாம் ஆத்திரமூட்டும் வகையில் மக்களைத் தூண்டும் பணியில் கொம்யூனிஸ்டுகள் தீவிரமாக முயன்றனராம். ஆனால் அவை எதுவுமே பலிக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் திட்டப்படி பாத யாத்திரை தொடர்ந்து வெற்றி அளித்துவருகிறது.

## பட்டாளத்தினர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்து காவல் முகாம்களில் அடைத்து வைக்கிறார்கள் என்று தகவல் கிடைத்துள்ளது. இவர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்க இலங்கையிலுள்ள இந்தியத் தூதராலயம் விஸா வழங்க மறுத்து வருவதாகக் கூறப்படுகிறது. காரணம் 1947ம் ஆண்டு முதல் அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் உடையவர்களாக உள்ளனர் இவர்கள்.

இந்தியத் தூதுவராலயம் 'விஸா' வழங்க மறுப்பது தவறு என்றும், சட்டவிரோதக் குடியேற்றக்காரரைக் கண்டுபிடிக்க இலங்கை இராணுவத்தினர் எடுக்கும் முயற்சிக்கு இந்தியத் தூதுவராலயம் முட்டுக்கட்டை போடுவதாகவும் சிங்களப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. இதை மறுத்து இந்தியத் தூதுவராலயம் அண்மையில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர் பத்து

## ஓலம்

வெட்டி எறிந்த வாழைகள், வீதியின் ஓரத்தில் கவனிப்பாரற்றுச் சருகாகிக் கிடக்கின்றன; கட்டி அறுக்கப்பட்ட வர்ணத் தாள்கள் வேலிக்கதியால்களில் தொங்கி, காற்றின் அலைப்பினால் சர சரத்துக் கொண்டிருக்கின்றன.

வீட்டின் முற்றத்தில் பெரும் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது என்பதற்கு அறிகுறியாக ஆங்காங்கு மரந்தடிகளும், தென்னங்கிடுகுகளும் இறைந்து கிடக்கின்றன. ஒரு திருமணம் நடந்து முடிந்ததற்கு அறிகுறிகள்.

—அவன் இதயம் சிதறிச் சிதைந்து விடும் போலிருக்கிறது. அவன் செயலற்றுப் போய், பேயறைந்தவன் போல நிற்கிறான். உள்ளத்திலே பொருளற்ற ஓசைகளெல்லாம் எழுந்தெழுந்து எண்ணக் குகையிலே மோதி மோதி எதிரொலிக்கின்றன.

பெரும் ஏமாற்றம்? வாழ்க்கையில் எந்த ஒரு மனிதனுக்கும் கிடைக்கக் கூடாத ஏமாற்றம்; எந்த ஒரு தோல்வி தனக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்காக, வேறு எத்தனையோ தோல்விகளைத் தாங்கினானோ, அந்தத் தோல்வி அவனுக்குக் கிடைத்து விட்டது.

'அடி புவனம், என்னை நீ ஏமாற்றிவிட்டாய்!'

அவன் நாசிக் குகைகளைத் துளைத்துக் கொண்டு, நெடிய மூச்சுக்கள் காற்றோடு கலக்கின்றன. திடீரென உடம்பு சூடேறி விட்டது போலக் கொதிக்கின்றது.

அவன் எண்ணங்கள் அத்தனையும் மணல் கோட்டைகளா?

'நான் ஒரு வேலை விடுமாறி வந்து விட்டேனே...? என் புவனம் என்னைத் தவிர வேறொருவனுக்குத் தலையை நீட்டவே மாட்டாள்...!'

வீட்டின் வெளித் திண்ணையில் காணப்படும், சாய்மனைக் கதிரையில் படுத்துக் கிடப்பவர் யார்?

'ஐயோ...!' என்று அலற வேண்டும் போலிருக்கிறது. அவன் தன் மார்பைக் கைகளால் அமுக்கிக் கொள்கிறான்; 'நான் இந்தக் கணப்பொழுதிலே இறந்து போய் விடக் கூடாதா? என்னிதயம் சுக்குச் சுக்காகச் சிதறிப் போய்விடக் கூடாதா? ஐயோ...புவனம், கடைசியில் என்னை ஏமாற்றி விட்டாயே...?'




கூட்டாக எழுதும் தொடர் கதை

'உதாரது...! ஓ...நீயா?... வா......தம்பி! வா.....!'—குரலிலே வெற்றிப் பெருமிதம் தோன்ற அவனை அழைப்பது, கந்தையர் தான். வீட்டுப் படிகளிலே கால்களைப் பதித்த ராஜா, கந்தையரை வெறித்துப் பார்க்கிறான்.

* * *

ஒரு கணம்தான்.

அதற்குள் அவனுடைய மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கி விடுகிறது. அண்ணி சர்வ சாதாரணமாகத்தான் கேட்கிறாள்:

'யார் தம்பி உமா...?'

உடனே பதில் சொல்ல அவனால் முடியவில்லை. சற்று நிதானித்துக் கொள்கிறான்:

'நான் கண்டியிலை தங்கியிருக்கிற வீட்டுச் சொந்தக்காரரின் மகள்......! ஏன், அண்ணி, அவளுக்கு என்ன.?'

'அவளுக்குக் கலியாணமாம்...! உடனே உன்னை வரும்படி அழைத்திருக்கிறார்கள்! இதோ, திருமண அழைப்பு...! இந்தா தம்பி! இன்னொரு கடிதமும் வந்திருக்கு......!'

அவன் அவற்றை வாங்கிக் கொள்கிறான்.

'உமாவிற்குக் கலியாணமா? அவள் தான் விரும்பியவனைத்தான் மணந்து கொள்கிறாளோ...?'

திருமண அழைப்பிதழைப் படிக்கிறான். மணமகனின் பெயர் இராமச்சந்திரன். பெயரின் கீழ் அவன் கல்வி கற்பிக்கின்ற கல்லூரியின் பெயர் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. உமா படிக்கின்ற கல்லூரிதான். அப்படியானால்......?

'உமா, நீ அதிர்ஷ்டக்காரியடி!'

அழைப்பிதழின் பின் பக்கத்தில், 'உடன் புறப்பட்டு வந்து தங்களுக்குக் கலியாண அலுவல்களில் உதவி செய்ய வேண்டும்' என்று எழுதியிருந்தார், உமாவின் தந்தை.

அவன் கண்களின் முன் ஒரு காட்சி விரிகிறது.

'மணவறை; அதிலே உமா, தன் வருங்காலக் கணவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். இருவருடைய முகங்களும் பெரு மகிழ்ச்சியினால் பொங்கித் ததும்புகின்றன. அவர்களுடைய இதயங்களில் இருந்த நிறைவு கண்களில் பிரகாசிக்கின்றது.'

அவன் மனக்கண்ணில் இன்னோர் மணவறை தோன்றுகிறது.

'அதிலே புவனம் தேவலோகத்து மங்கையாக அமர்ந்திருக்கிறாள்; அவளருகே பூரிப்பின் நிறைவோடு அமர்ந்திருக்கிறான், அவன். ஐயர் தாலியை நீட்டுகிறார்! புவனத்தின் வெண்சங்குக் கழுத்திலே தாலியை இணைக்கும்போது, அவள்

செங்கை ஆழியான்

நெற்றியிலே புரண்ட தலைமயிரை, உதடுகளைக் குவித்து ஊதி விடுகிறான், அவன்! அவள் சிவந்து விடுகிறாள்...!'

அவன் உதடுகளில் மென்னகை அரும்புகிறது; கூடவே இருந்த கடிதத்தை உடைக்கிறான்; சின்ராசுதான் கடிதம் எழுதியிருந்தான். அக்கடிதத்தில் புதிதாக ஒரு விஷயமும் இல்லை. முன்பு நேரில் கூறியவற்றையே வினயத்தோடு வரைந்திருக்கிறான்: தம்பி, உம்மைத்தான் நம்பியிருக்கிறோம். நீர் இங்கு வரும்போது மகிழ்ச்சியான செய்தியோடு வருவீர் என்று எதிர்பார்க்கின்றோம்!'

அவன் சின்ராசுவின் கடிதத்தை வைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்கிறான்; என்ன செய்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. கந்தையர் வீட்டிற்குப் போக அவனுக்குத் துணிவில்லை; ஓரளவு பயமாகவும் இருக்கிறது.

'தம்பி, உம்மைத்தான் நம்பியிருக்கிறோம்...'

— அவன் திடத்தோடு எழும்புகிறான்.

* * *

கந்தையரின் கண்களில் கேலி கூத்தாடுகிறது. தன் முறுக்கு மீசையைத் தடவி விட்டுக் கொள்கிறார்; அவருடைய ஒவ்வொரு செய்கையிலும் ஏதோ வெற்றிபெற்றுவிட்டவனின் பெருமிதம் ஊடாடிக் கொண்டிருப்பதை ராஜாவால் நன்குணர முடிகிறது.

அவனை இப்படி வரவேற்று, தனக்கு முன்னால் கதிரையில் அமர்த்திக் கொள்வார் என்று எதிர்பார்த்தவனல்ல.

'என்ன தம்பி, கண்டிச் சுவாத்தியம் நல்லா ஒத்துக் கொள்ளுதே...?'

அவன் ஒன்றும் பேசாமலிருக்கிறான்; கந்தையரும் பதிலை எதிர்பார்த்தவராகத் தெரியவில்லை.

'சம்பளம் எவ்வளவு கிடைக்கும்... ஒரு இருநூறு ...முன்னூறு......?

'நூற்று எழுபத்தைந்து மட்டில் கிடைக்கும்......!'

'ஆக இதுதானே...? நான் ஒரு மாப்பிள்ளை எடுத்திருக்கிறேன்... ஆயிரம் ரூபா சம்பளக்காரன்......!'

'நூற்று எழுபத்தைந்து ரூபா சம்பளம் எடுக்கும் உன்னை என் மருமகனுக்கிக் கொள்வேன் என்று எதிர்பார்த்தாயா?' என்று கூறாமல் கூறுகிறாரா? அவன் இதயம் ஆசாபாசங்கள் நிறைந்த மனித இதயம்தான்.

அவன் இதயம் ஊமைக் கண்ணீர் வடிக்கிறது: 'புவனம்... புவனம்... ஐயோ... புவனம்...!'

'உன்ரை கோச்சி, கொண்ணை எல்லாரும் சுகமே...?'

'... ம் ...!'

'உன்ரை கொண்ணைக்கு ஒரு பிள்ளையும் பிறந்திருக்க வேணும், என்ன?...'

'... ம் ...!'

'என்ன பிள்ளை...... பொம்பிள்ளையே...?'

'ஆண்' குழந்தை......!'

'என்ன வந்ததிலே இருந்து சுரத்தில்லாமல் கதைக்கிறாய்?...என்ன விஷயம்...?'

உண்மை தெரிந்தும் வேஷம் போடும் அத்தரை அவன் விழிகளை நிமிர்த்திப் பார்க்கிறான்; அவன் கண்கள் கலங்கி விடுவன போலத் தவிக்கின்றன; தலையைக் குனிந்து கொள்கிறான். அவன் வந்த நோக்கம் வேறு. ஆனால், வந்தவிடத்திலே அவனுக்குக் காத்திருந்தது, பேரிடி. கந்தையரின் 'நக்கல் பாஷை' அவனுக்கு வேதனையையும், வெறுப்பையும் அளிக்கின்றது. அவன் எழுந்து ஓடிவிடத் துடிக்கிறான். கந்தையர் சுருட்டொன்றை வாயில் வைத்தபடி அவனைப் பார்க்கிறார்:

'நீ வந்தது என்னத்துக்கெண்டு எனக்குத் தெரியும்!'

அவன் தலை வேகமாக நிமிர்கிறது; அவன் கண்களை நேருக்குநேர் சந்திக்க முடியாமல், கந்தையர் வெளியே பார்த்தபடி, பேசுகிறார்;

"கனகம் தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி கடிதம் எழுதியிருக்கிறான்! உன்னிடம் எல்லாம் கூறி அனுப்பி இருப்பதாகவும் எழுதியிருக்கிறான்! என்னத்தைச் செய்யிறது...அவளும் ஏதோ தெரியாமைப் பிழை செய்து போட்டாள்...! இண்டைக்கு நான் கடிதம் எழுதிப் போட்டிருக்கிறன், வந்து சேரும்படி! பாவம், கனகம், புவனத்தின்ர கலியாணத்திற்குத்தான் இல்லாமல் போட்டால்...'

இனியும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது.

விருட்டென்று எழுகிறான்:

'மாமா!...நீங்க...' ஏதோ சொல்லத் துடிக்கிறான், அவன்; வார்த்தைகள் வெளிவரத் தயங்குகின்றன. கந்தையர் ஏளனமாகச் சிரிக்கிறார்:

'மாமா...! ஆரடா மாமா? ...உங்காளாலை நாங்கள் குடியிருந்த வீட்டை விட்டு இங்கை வந்திருக்கிறம் மாமாவாம், மாமா...!என்ன துணிவோடையடா இங்கை கால் வைச்சனி? உன்னை அடிச்சு முறிச்சிருப்பன்...... சின்னப் பிள்ளையாப் போட்டாய்...!மூளைச்சு ரெண்டு இலைவிடேலை, அதுக்குள்ளை காதல்...கத்தரிக்காய்... போடா வெளியாலை...!'

கந்தையரின் சுட்டுவிரல் படலையை நோக்கி நீண்டிருக்கிறது.

அவன் கால்கள் தள்ளாடுகின்றன; சுமக்க முடியாத வேதனையைச் சுமந்து கொண்டு வீதியில் இறங்கி, நடக்கிறான்.

* * *

நான்கு மாதங்கள்!

—அவனைப் பொறுத்தமட்டில் வெகு நீண்ட காலம். அவன் இதயத்தில் மயானத்து நரிகள் நிறைய ஊளையிடுகின்றன.

வெளியே, மலைமகளைக் குளிப்பாட்டி அழகுபடுத்த, சோனாவாரியாக மழை பொழிகிறது; வாளைவெட்டி மின்னல் கிளைகள் தாவ, இடிவான் திரையைக் கிழிக்கிறது. வெளியே மட்டுந்தான் இயற்கையின் நாடகமல்ல.

அவன் சோர்ந்து போய்க் கட்டிலில் துவண்டு கிடக்கிறான்.

'அவனுக்கு இனி வாழ்க்கையில் என்னதான், இருக்கிறது...!

எந்த ஒரு இலட்சியத்தை நோக்கி நம்பிக்கையோடு முன்னேறினானோ, அந்த இலட்சியம் கானல் மயக்கமாகி விட்டது.

இனி அவனுக்கு வாழ்வே இல்லையா?

'ஒரு புவனத்திற்காக அவன் தன் வாழ்வை நரகமாக்கிக் கொள்வதா? அவளுக்கு மட்டும் அவன்மேல் உண்மையான அன்பிருந்தால், காதல் இருந்திருந்தால், இப்படிச் செய்திருப்பாளா? நல்லாச் சொன்னான், ஒருவன்; பெண்களின் உள்ளம் வளர்வதற்குமுன், உடல் வளர்ந்து விடுகிறது, என்று புவனத்தின் ஆசை மயக்கத்தை அவன் உண்மை என்று. நம்பி ஏமாந்து போனான்! சாய்!...அவனுக்கு இனியும் ஒரு வாழ்வா?'

புவனம் வாழவில்லையா, அவனை மறந்து...? அவனால் வாழ முடியவில்லை, அவளை மறந்து! பெண்கள் இடத்திற்கேற்ப நிறம் மாறும் பச்சோந்திகள் தாம்...!

சரசு...?

உமா...?

'ஒருத்தியால் கிடைத்த ஏமாற்றத்தை, என்னோடு பழகுவதால் அவரால்மறக்க முடிகிறது, என்பதை நானறிகிறேன், சித்தி! அவர் வெற்றிதயம் அமைதிதரும் அன்புக்காக ஏங்குவதை என்னால் உணரமுடிகிறது, சித்தி! அவர் பெற ஏங்குகின்ற அந்த அன்பை, அவர் வாழ்வில் பெறவிரும்பும் அமைதியை நானவருக்கு அளிக்கக் கூடாதா? எத்தனை நல்லவர்களின் வாழ்வை இக்காதல் சீரழித்து விடுகிறது! சீரழிந்துபோன அவர் வாழ்வைச் செப்பனிட நான் ஆசைப்படுகிறேன், சித்தி!" உமா கூறிய வார்த்தைகள்

(13ம் பக்கம் பார்க்க)




பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

தந்தி தாமரை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகத்தில் மூவர்ணக் கொடி

## மக்கள் குரல்

## தமிழரசின் வெற்றியை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது

தியாகத்தின் வரலாறு தொடக்கப்பட்ட தமிழர்களின் கோட்டையான திருமலையின் காவலவராக விளங்கிய சொல்லின் செல்வர், அமரர் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கள் அமரராகிய இடத்தை நிரப்ப, தக்கதொரு தலைவனை நியமிக்கத் தமிழரசார் திருமலையின் ஊராட்சி மன்றத்தில் குழுமினர். மக்களின் விளக்கம் கேட்கத் தலைவர்கள் காலை 10-15 தொடக்கம் மாலை 6-00 மணி வரை ஆர்வம் காட்டினர்.

சிங்கள ஆட்சியின் அடிவருடிகள் வந்தனர், நாங்களும் தமிழராகதான் என்றனர். உணர்ச்சி மிகு வாலிபர்கள் வந்தனர், வாலிபத் தலைவர் வேண்டும் என்றனர். அறம் கூறும் அந்தணர் வந்தனர். அறம் வெல்லும், மறம் சாயும் என்றனர். எதிர் சேர் கிராமத் தலைவர்கள் வந்தனர், மக்கள் ஆதரவு உங்களுக்கே என்றனர். திருமலையின் தமிழரசுக் கிளையினர் வந்தனர், முடிவு செய்வது செல்வா என்றனர்.

தந்தை செல்வா, தலைவர் இராசமாணிக்கம், தளபதி அமிர்தலிங்கம், மூதூர் மதல்வர் முகமதலி ஆகியோர் மக்களின் கருத்தைத அறிய ஆர்வம் காட்டினர். உணர்ச்சிகளுக்கு அப்பால் நின்று உண்மை நிலையென்ன என்ன என்று ஆராய்ந்தனர். அன்று மாலை அமரரான இராஜவரோதயம் அவர்களின் இரங்கல் கூட்டம் நகர மண்டபத்தில் நடைபெற்றது. அன்றைய கொள்கை விளக்கம் மக்களைத் திருப்திப்படுத்தியது என்பதை மக்களின் முக மலர்ச்சி காட்டிக் கொடுத்தது. மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொள்கை விளக்கம் பெற்றனர்.

திங்கள் மதியம் திருமலையின் இடைத் தேர்தலில் திரு. மாணிக்கராஜா அவர்களைக் கட்சியின் தலைமைப்பீடம் தெரிவு செய்திருப்பதாக அறிவிப்புக் கிடைத்ததாக அறிந்தோம். மக்களின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. திருவாளர் மாணிக்கராசா அவர்கள் திருமலையைத் தாயகமாகக் கொண்டவர். திருமலை நகராண்மைக் கழகத்தின் முன்னாள் தலைவராகப் பணிபுரிந்தவர். அன்னார் ஒரு பிரபல வழக்கறிஞர் ஆவார். அவர் கொழும்பில் வசிக்க நேர்ந்தது திருமலை மக்களின் துரதிர்ஷ்டமாகும். அமரரான இராஜவரோதயம் அவர்களை முதல் முதலில் தந்தை செல்வாவிடம் அறிமுகப்படுத்தி அவரை அரசியலில் பங்கு கொள்ளும்படி ஊக்கமளித்தவர் திரு. மாணிக்கராஜா அவர்கள் ஆவர். தந்தை செல்வா உட்பட அநேகர் தேர்தலில் தோல்வியுற்ற நேரத்தில் திருமலையில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. இராஜவரோதயம் அவர்களின் வெற்றிக்கு முழு மூச்சாகப் பாடுபட்டவர் திரு.மாணிக்கராஜா அவர்கள். 1956ம் ஆண்டு தேர்தலில் மீண்டும் திரு. இராஜவரோதயத்தின் வெற்றிக்குப் பாடுபட்டார். கடந்த ஏழு வருடங்களாகத் தொழில் நிமித்தமாக அவர் குடிபெயர்ந்தது கவலைக்குரியது.

திருகோணமலையின் இடைத் தேர்தலில் தமிழரசு வெல்வதை எந்தச் ச(க்)தியாலும் தடுக்க முடியாது.

"துயோன்"

பட்டணத் தெரு,
திருகோணமலை.

---

## இஸ்லாமியன் யார்? சோனகன் யார்?

"ரளீது பில்லாஹி ரப்பன், வபில் இஸ்லாமி தினன், வபில் குர்ஆனி இமாமன், வபில் கஃபதி கிப்லதன், வபில் முஃமினீன இக்வானு"

இதன் பொருள்: "அல்லாஹ்வை நாயனென்றும், இஸ்லாத்தை என் வேதமென்றும், திருக் குர்ஆனை என் வழிகாட்டியென்றும், பரிசுத்த கஃபாவை என் முன்னிலை என்றும், உண்மை விசுவாசிகள் (முஸ்லிம்கள்) எல்லோரும், என் உற்ற சகோதரர்கள் எனறும் நான் ஏற்றுக் கொண்டேன்" என்பது முஸ்லிம்களின் திடமான நம்பிக்கை. இத் திருமந்திரத்தை முஸ்லிம்கள் படித்துக் கொண்டே, இஸ்லாமியன் வேறு, சோனகன் வேறு, எனக் கூறுவதேனோ? இது புரியாத புதிராக இருக்கிறதல்லவா? இதையே அன்பர (இஸ்லாமியர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்) ஐனுப் ஏ. அஸாத், சுதந்திரன் பத்திரிகை மூலம், வேண்டுகோள் விடுத்து, முஸ்லிம்கள் ஐக்கியப்பட வேண்டுமெனக் கூறுகின்றார். நல்ல சமயத்தில் அன்பர் இவ்வறிக்கையை விடுத்தது பாராட்டுதற்குரியதாகும்.

இலங்கை முஸ்லிம்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும். "வந்த பின் காப்பதைவிட வருமுன் காப்பதே" அறிவுடைமையாகும்.

"நீங்கள் உங்கள் சமூகத்தைக் காப்பாற்றினுல் ஒழிய, இறைவன் காப்பாற்றுவதில்லை". — (அல்-குர்ஆன்).

அல்-ஹாஜ்
வி. எம். ஷம்சுத்தீன்.
கொழும்பு.

## தந்தை செல்வாவுடன் மேடையில் தோன்ற இடதுசாரித் தலைவர்கள் தொடை நடுக்கம்

### பொறியியல் மாணவர் அரங்கில் நடைபெற்ற சம்பவம்

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் கூட்டங்களில் பேசுவதற்கு அரசியல் கட்சித் தலைவர்களை அழைப்பதானுல் அக் கட்சிகளின் சார்புள்ள மாணவர்கள் மூலம் அத்தலைவர்களை அழைப்பது வழக்கமாக இருந்து வந்தது. பல்கலைக் கழகச் சங்கங்கள் தமிழரசுக் கட்சித் தலைவர்களைக் கூட்டங்களுக்கு அழைக்க வேண்டுமெனில் ஒரு குறிப்பிட்ட பொறியியல் மாணவரை அணுகுவது வழக்கம்.

1953ம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலின் ஞாபகார்த்தமாகச் சென்ற ஆண்டும் இவ்வாண்டும் பொறியியல் மாணவர் மன்றம் கூட்டம் நடாத்தியுள்ளது. இவ்வாண்டுக் கூட்டத்திற்குத் தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிதியான தமிழரசுக் கட்சியையும் அழைக்க வேண்டும் எனத் தமிழ் மாணவர்கள் விடுத்த கோரிக்கையை இலக்கிய குழு அதிபர் ஏற்றுக் கொண்டார்.

#### முன் வெளியான அறிவித்தல்

அதன்படி, தமிழரசுக் கட்சியின் சார்பில் ஒரு பேச்சாளரை ஒழுங்கு படுத்தும்படி இலக்கிய குழு அதிபர் மேலே குறிப்பிட்ட பொறியியல் மாணவரைக் கேட்டுக் கொண்டார். மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் சார்பில் பேச்சாளர்களை ஒழுங்கு பண்ணும்படி இன்னுமொரு மாணவரை அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் தந்தை திரு. செல்வநாயகமும் இடதுசாரிக் கட்சிகளின் சார்பில் செனட்டர் றெஜி பெரேரா, திரு. ஸ்டான்லி திலகரத்தின, திரு. சண்முகதாசன், திரு. பாலா தம்பு ஆகிய நால்வரும் ஒழுங்கு செய்யப்பட்டனர். இந்த ஐவரும் கூட்டத்தில் பேசுவார்கள் எனக் கூட்டம் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே கரும்பலகையில் எழுதப்பட்டது.

#### இடதுசாரிகள் தொடை நடுக்கம்

கூட்டத்திற்குத் தந்தை செல்வாவும் அழைக்கப்பட்டிருக்கிறர் என்பதை திருவாளர்கள் றெஜி பெரேராவும் ஸ்டான்லி திலகரத்தினவும் கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் கேள்விப்பட்டனராம். தங்களை ஒழுங்கு பண்ணிய மாணவரை அவசர அவசரமாக அழைத்து தந்தை செல்வா தோன்றும் மேடையில் தாமும் தோன்ற முடியாது என்று பயமுறுத்தினராம். நல்ல காலம், தமிழ்ப் பெயர்களையுடைய சண்முகதாசனும் தம்புவும் அவ்வாறு பயமுறுத்த முன்வரவில்லை.

#### தமிழ் மாணவர் கொதிப்பு

இந்தப் பயமுறுத்தல் மன்றத் தலைவருக்கும் இலக்கிய குழு அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டதாம். அவர் தந்தை செல்வாவின் பெயரைக் கரும்பலகையிலிருந்து அகற்றினராம். இதைக் கண்ட தமிழ் மாணவர்கள், "இது தான் உங்கள் சமசமாஜிசமா?" என்று கேட்டதிற்கு, "திரு. செல்வநாயகத்தை நான் அழைக்கவில்லையே" என்று சட்டம் பேச ஆரம்பித்தாராம் அந்த நபர். தான் நேரில் சென்று அழைக்காத தந்தை செல்வாவின் அழைப்பை வாபஸ் வாங்கியதோடு அச் செய்கைக்கு மன்னிப்பும் கேட்டாராம் இலக்கிய குழுத் தலைவர்.

தந்தை செல்வாவுக்குத் தடை விதிப்பது, தம் மீது காறி உமிழ்வதற்கு நிகர் எனக் கூறித் தமிழ் மாணவர்கள் கொதித்தெழுந்தார்கள். அன்றைய கூட்டத்தைப் பகிஷ்கரிக்க ஒழுங்குகள் செய்தார்கள்.

இதைக் கேள்விப்பட்டோ என்னமோ செனட்டர் றெஜி பெரேரா கூட்டப் பக்கம் தலைகாட்டவேயில்லை. திரு. ஸ்டான்லி திலகரத்தினவும், திரு. சண்முகதாசனும், திரு. தம்புவும் வந்து சேர்ந்தார்கள்.

ஆனல் ஜோர்ஜ் மன்னர் மண்டபத்தில் 88 பேரே இருந்தனர்.

#### கோட்டைக்குள் குத்து வெட்டு

கூட்டம் ஆரம்பித்தும் திரு.சண்முகதாசன் "புரட்சி புரட்சி" என ஏதோ பேசினர். அவரையடுத்து திரு. தம்பு பேசிமுடித்தார். கடைசியாகப் பேசிய திரு. திலகரத்தின, திரு. சண்முகதாசனைத் திட்டித் தீர்த்தார். இத்தனைக்கும் சண்முகதாசனும் திலகரத்தினவும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள். ஆனல் ஒருவருக்குத் தமிழ்ப் பெயர், மற்றவருக்குச் சிங்களப் பெயர்!

#### பகிஷ்காரம்

கூட்டம் முடிவடைந்ததும், "சென்ற ஆண்டு 300க்கும் மேல் இருந்த கூட்டத்தில் இந்த ஆண்டு ஆக இவ்வளவு பேரும் தானு?" என்று ஒரு தமிழ்க் கம்யூனிஸ்டிடம் திரு. திலகரத்தின கேட்டாராம்.

"தமிழரசுக் காரர்கள் பகிஷ்கரிக்கிறர்கள்" என்று அந்த நபர் பதிலளித்தாராம்!

அன்றைய தினம் தமிழரசாரின் பகிஷ்கரிப்பு பூரண வெற்றியளித்தது என்பதற்கு இந்த உரையாடலே போதுமானது!!

#### தமிழ் மாணவர் விலகல்

பகிஷ்கரிப்போடு மட்டும் தமிழ் மாணவர்கள் நின்று விடவில்லை. நேரடி நடவடிக்கையிலும் இறங்கினர்கள், தந்தை செல்வாவின் அழைப்பை வாபஸ் செய்ததை ஆட்சேபிக்கும் முக

(13-ம் பக்கம் பார்க்க)



புதிய மேற்கு ஜேர்மன் விப்பிரதமர் டாக்டர் லட்விக் எர்ஹார்ட்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நீரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடிப்பாடி இசை உலக இன்பத்தில் திளைத்த இந்த இரு இளம் உள்ளங்களுக்கும் என்னதான் நேர்ந்து விட்டதோ? வெகுவிரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கும் இசையும் ஹாஸ்யமும் நிறைந்த புதுமைச் சித்திரமான 'ஜிஸ் தேஷ் மே கங்கா பேஹ்தி ஹை' என்ற இந்திப் படத்தில் பத்மினியும் ராஜ்கபூரும் இப்படித் தோன்றுகிறார்கள்.

நாடக விமர்சனம்:

# 'மஞ்சள் குங்குமம்'

கிங்ஸ்லி செல்லையாவின் ஆனந்தா புரடக்ஷன்ஸ் அளித்த 'மஞ்சள் குங்குமம்' நாடகம் 'லயனல் வென்ட்' தியேட்டரில் நடைபெற்றது. எக்கச்சக்கமான விளம்பரங்களுடன் நடைபெற்ற இந்நாடகத்தில் எந்தவிதமான புதுமையையும் நாம் காண முடியவில்லை. கதையைப் பொறுத்தவரை எதுவித திருப்பமோ கவர்ச்சியோ இருக்கவில்லை. இவ்வளவு செய்தவர்கள் நல்ல தொரு கதையைத் தேர்ந்தெடுக்காதது ஏனோ தெரியவில்லை.

ஒரு கலைஞன் தனது மாணவியைக் காதலிக்கிறான். பெற்றோரின் பலாத்காரத்தினால் அப்பெண் சொந்த அத்தானுக்கே வாழ்க்கைப் படும்படி ஆகிவிடுகிறது. காதலனால் கற்பழிக்கப்பட்டு, கருவுற்றிருக்கிறாள் என்றறிந்த பின்னரும் அவன் அவளைப் பதிவுத் திருமணம் செய்துவிட்டு, காதலனுடன் வாழ அனுமதிக்கிறான். இந்தக் கதையில் என்னதானிருக்கிறதோ-அதுதான் புதுமை போலும்!

நடிக நடிகைகளைப் பொறுத்தவரையில் நாம் எதுவும் குறை கூறுவதற்கில்லை. எல்லோரும் பாத்திரங்களுக்கேற்ப நன்றாக நடித்துள்ளனர். ஒரே ஒரு காட்சி அமைப்புடன் கூடிய இந்நாடகத்தில் அவசியமான கணக்கம் தென்படக் காரணம், காட்சி மாற்றமல்ல—நடிகர்களின் உடை மாற்றம்தான் என்பதை எண்ணும்போது சிரிப்புத்தான் வருகிறது.

அவசியமற்ற பாடல்களுக்கு இடம் கொடாதது ஒரு புதுமையே. ஆனால் இடையிடையே சினிமா இசைத்தட்டுகளை உபயோகித்து காட்சிகளுக்குப் பயன்படுத்தியிருக்க வேண்டியதில்லை.

ஒளி அமைப்பு நன்றாகவிருந்தது. லயனல் வென்ட் மேடை அதற்குதவியது எனினும், பாராட்டாமலிருக்க முடியாது. மேடை ஒழுங்குகளும் சிறப்பாகவிருந்தன.

நாடகத்தை நாம் அதிகமாகக் குறை கூறவில்லை. ஆனால் நிர்வாகிகள் என்று அடிக்கடி தம்பட்டமடித்துக் கொண்டு திரிந்தவர்கள் எந்தவிதமான ஒழுங்குகளையும் செவ்வனே செய்யவில்லை என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

ஆனந்தா புரடக்ஷன் சாரின் கன்னிப் படைப்பான 'மஞ்சள் குங்குமம்' வெற்றியான தயாரிப்புத்தான். நாட்டுக்கேற்ற நல்ல கருத்துக்களை வழங்கக்கூடிய நல்ல நாடகங்களை மென் மேலும் வழங்குவார்களென நம்புகிறோம்.

—நாதன்.

## இலங்கை சினிமா ரசிகர் சங்கம்

### அதிகார் செல்லமுத்துவின் மறைவுக்கு அனுதாபம்

இலங்கை சினிமா ரசிகர் சங்கத்தின் செயற்குழு 11ம் திகதி கூட்டிய அவசரக் கூட்டத்தில், காலஞ்சென்ற அதிகார் செல்லமுத்துவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றை நிறைவேற்றினர். இக் கூட்டத்துக்குத் திரு. என். டி. சிவநாயகம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய சங்கக் காரியதரிசி, திரு. கே. பாலச்சந்திரன், காலஞ்சென்ற அதிகார் அவர்கள் நாட்டின் கலாச்சாரத்துறையின் முன்னேற்றத்தில் காட்டிய அக்கறையையும், சினிமா ரசிகர் சங்கத்துக்கு நல்கிய பேராதரவையும் பாராட்டினர். இதே ரீதியில் பாராட்டுத் தெரிவித்த தலைவர், அதிகார் செல்லமுத்துவின் மறைவு நாட்டுக்குப் பெரியதோர் இழப்பு எனக் கூறினர்.

எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த அதிகாரவர்களின் மறைவையொட்டிய அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது. அனுதாபத் தீர்மானத்தின் பிரதியொன்றை அதிகாரவர்களின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கும்படி காரியதரிசி கேட்டுக்கொள்ளப்பட்டார்.

## 'மலை வாசல்'

"மலை வாசல்" என்ற பெயரில் ஒரு தமிழ்ப் படத்தை இலங்கையில் தயாரிக்க ஆர். எஸ். பிக்சர்ஸ் உரிமையாளர்கள் திரு. கே. ஏ. இராமனும், திரு. ரி. சண்முகமும் முனைந்து வருகின்றனர். மலையக தமிழ் மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதாகவே இப் படமும் இருக்குமாம்.

கலை நுணுக்கஅம்சங்களில் இப்படத்தைத் தரமானதாக ஆக்குவதற்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள். இலங்கைக் கலைஞர்களே இப் படத்தில் நடிப்பார்களாயினும், அரசாங்கம் உத்தரவு அளிக்குமானால் தமிழக முன்னணி நடிகர்களில் சிலரையும் தருவிக்கவிருப்பதாக அறிகிறோம்.

விஜயா ஸ்ருடியோவில் படமாக்கப்படவிருக்கும் இப் படத்திற்கான இசை அமைப்பை திரு. ஆர். முத்துசாமி அவர்களும் கமிராவை திரு. லெனி. டி. கொன்டா [illegible] விரைவில் பட ஆரம்பத் [illegible] நடைபெறவுள்ளது.



அராலி சரஸ்வதி நாடக மன்றத்தினரால் அண்மையில் அரங்கேற்றப்பட்ட 'வெட்கம்' என்ற நாடகத்தில் இரு [illegible] சுந்தரம்பிள்ளை பி. ஏ. அவர்கள் இந் நாடகத்தின் [illegible] ராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகப்படுத்துகிறோம்

"நான் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படுகிறேன். பேரும் புகழும் இருந்தால்தான் நாம் சொல்லும் கருத்தை மக்கள் மதிப்பார்கள். பேரும் புகழும் இல்லாத எவனையும், அவன் எவ்வளவு அறிவாளியாகவிருந்தாலும் உலகம் மதிப்பதில்லை" என்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனே கூறியுள்ளார். நல்ல பேரும், நால்வரின் புகழ்ச்சியும் உள்ள ஒருவன் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாடும் ஏடும் மதிப்பளிப்பது கண்கூடு.

இலங்கையில் பல புகழ் பெற்ற கலைஞர்கள் இலைமறை காய் போல் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோரை 'சுதந்திரன்' முன்பெல்லாம் அறிமுகப்படுத்தி வந்திருக்கிறது. அந்த வரிசையிலேயே மேடைக் கலைஞர்களை அறிமுகப்படுத்தும் பணியினை மீண்டும் ஆரம்பிக்கிறோம்

'மேடைக் கலைஞர்கள்' என்ற வரிசையில், நாடகங்களில் நடிப்பவர்கள், நடனமாடுபவர்கள், இசைக் கலைஞர்கள், மேடைக் காட்சி அமைப்பாளர்கள் ஆகியோரை வாசகப் பெருமக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க எண்ணியுள்ளோம்.

### குறிப்புகள் அனுப்பும் முறை

கலைஞர்கள், (நற்புகழ்ச்சி என்ற பதத்தை அசட்டை செய்து கொண்டு) தங்களைப் பற்றிய குறிப்புகளைச் சுருக்கமாக எழுதி அனுப்புதல் வேண்டும். நடிகர்களானால் தாங்கள் நடித்த நாடகங்களின் பெயர், மன்றத்தின் பெயர், புனைந்த வேடம் முதலியவற்றுடன் நாடக மன்ற நிர்வாகிகளிடமிருந்து சான்றிதழ் ஒன்றும் பெற்று அனுப்பி வைத்தல் நன்று.

நடிகர்களும், நாட்டியக் கலைஞர்களும் அண்மையில் நடைபெற்ற நாடகத்திலோ, நடனத்திலோ இருந்து, புனைந்த தோற்றத்துடன் கூடிய புகைப்படம் ஒன்றும், 'பாஸ்போட்' அளவு சாதாரண புகைப்படம் (கறுப்பு-வெள்ளை) ஒன்றும் அனுப்பி வைத்தல் வேண்டும். படங்களின் பின்புறத்தில் பெயரும் முகவரியும் இருத்தல் வேண்டும்.

ஏனைய கலைஞர்களும் தங்கள் தகுதிக்குரிய சான்றிதழ்களை உசிதமான முறையில் அனுப்பி வைப்பதுடன் 'பாஸ்போட்' அளவு (கறுப்பு—வெள்ளை) படம் ஒன்றும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### உங்கள் ஒத்துழைப்பு

தாங்களே தங்களைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதைப் பல கலைஞர்கள் விரும்புவதில்லை. கலையைப் பொறுத்த வரை, கலைஞர்கள் கலைவாணரின் மேற் கூறப்பட்ட கருத்தை அனுசரிப்பதே சாலச் சிறந்தது என்ற எண்ணத்துடன், கலைஞர்களின் ஒத்துழைப்பை நாடுகின்றோம்.

'அறிமுகப் படுத்துகிறோம்' பகுதியில் கலைஞர்களை 'சுதந்திர'னே அறிமுகப்படுத்துவதால் கலைஞர்கள் தாங்களாகவே தங்களைப் பற்றிய விபரங்களைத் தருவதில் தயங்கத் தேவையில்லை.

இதுபற்றிய கலைஞர்களின் கருத்தையும் அறிய 'சுதந்திரன்' ஆவலாயுள்ளது. உங்கள் கருத்துக்களைக் கடித மூலமோ, நேரடியாகவோ தெரிவிக்கலாம்.

'அறிமுகப் படுத்துகிறோம்' பகுதிக்கு விபரங்கள் தரும் கலைஞர்கள் தங்கள் விபரங்களுடன், கீழ்க்காணும் பத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் என்று கோருகிறோம்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

அறிமுகப்படுத்துகிறோம்;
"சுதந்திரன்"
த. பெட்டி 1183
கொழும்பு.

## அறிமுகப்படுத்துகிறோம்

முழுப் பெயர்.......................................................

முகவரி .......................................................

.......................................................

துறை .......................................................

(நாடகமா, நடனமா அல்லது வேறு வகையா என்பதைக் குறிப்பிடவும்)

பங்குபற்றிய நிகழ்ச்சிகள்.......................................................

.......................................................

.......................................
பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் கையொப்பம்

(18 வயதுக்குக் குறைந்த நடிகர்களும் பெண் கலைஞர்களும் அவசியம் நிரப்ப வேண்டியது)

.......................................
கையொப்பம்

## அவமானம்

வெள்ளவத்தை ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தினரின் 'அவமானம்' என்னும் நாடகம் மீண்டும் பல ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இசைய அடுத்த மாதம் 10, 11ம் திகதிகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட இருக்கிறது.

இந்நாடகம் இலங்கையின் பல பாகங்களில் மேடையேற்றப்பட்டு ரசிகர்களினது பலத்த ஆதரவைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## எரிமலை

சென்ற ஞாயிற்றுக்கிழமை (13-10-63) பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'பெட்டிப்பாம்பு' (நகைச்சுவை நாடகம்), 'எரிமலை' (சமூக நாடகம்) ஆகியவற்றின் விமர்சனம் அடுத்த வாரம் இப்பகுதியில் இடம் பெறும்.



திருமலைத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளரான திரு. எஸ். எம். மாணிக்கராசா தனது நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்யத் தயாராகிக்கொண்டிருக்கிறார். அருகில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும், திருமலை நகராண்மைக் கழக பத்தாம் வட்டார உறுப்பினர் வழக்கறிஞர் திரு. செல்வராஜாவும் வைத்திய கலாநிதி திரு. சித்திரவேலு அவர்களும் அமர்ந்திருக்கிறார்கள்.

—படம்: அரசு ஸ்டுடியோ, திருமலை.

திருமலை இடைத் தேர்தல்

# தமிழரசு வேட்பாளர் நியமனம் தாக்கல்

திருமலைத் நிரர் திரு. ந. இ. இராசவரோதயம் அவர்களின் மறைவினுல் காலியான திருகோணமலைத் தொகுதி இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கடந்த புதன்கிழமை நண்பகல் திருமலைக் கச்சேரியில் அரசாங்க முதல்வரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராக திரு. எஸ். எம். மாணிக்கராசா நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார்.

திரு. மாணிக்கராசா அவர்களின் தேர்தல் சின்னமாக வீடு கிடைத்துள்ளது. நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்படுவதைக் கவனிப்பதற்காக தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. சிவசுந்தரம், மூதூர் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஈ. எச். முகம்மதலி ஆகியோர் நேரில் சென்றிருந்தனர்.

திரு. மாணிக்கராசா கட்சித் தலைவர்கள் சூழ நியமனப்பத்திரத்தைத் தாக்கல் செய்துவிட்டு வெளியில் வந்ததும் கூடி நின்ற ஆயிரக்கணக்கான கட்சி அனுதாபிகளும் அங்கத்தவர்களும் கரகோசமிட்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். இலங்கைத் தமிழரசுக் கட்சித் திருமலைக் கிளைத் தலைவர் மற்றும் முக்கிய பிரமுகர்களும் மலர் மாலை சூட்டி அனைவரையும் ஊர்வலமாக திருமலை வீதி வழி அழைத்துச் சென்றார்கள்.

அன்று பிற்பகல் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் திருமலை முற்ற வெளி மைதானத்தில் ஓர் மா பெரும் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தலைவர்கள் அனைவரும் திருமலைத் தொகுதி தமிழ் பேசும் மக்களிடமிருந்தபறிபோகாவண்ணம் காப்பாற்றும் பொறுப்பு திருகோணமலைத் தொகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்களின் தலையாய கடன் என்று குறிப்பிட்டார்கள்.

## கொம்யூனிஸ்டு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கொம்யூனிஸ்ட் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், ஆட்சி எவ்வாறிருக்கும் என்பதற்கு, அன்றைய விழாவில் அவர்கள் நடந்து கொண்டது ஒரு எடுத்துக் காட்டாக அமைந்ததென்று கருதலாம்.

'பொதுக் கூட்டத்தில் பண்புடன் நடக்கத் தெரியாதவர்களா தமிழர்களுக்காக மக்கள் இலக்கியம் படைக்கப் போகிறார்கள்?' என்று முற்போக்கு எழுத்தாளர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள் மக்கள்.

ஆனால் இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாது, தாங்கள் ஏதோ இமயச் சாதனை புரிந்து விட்டோம் என்ற திருப்தியில், பத்திரிகைகளுக்குச் செய்திகளைத் திரித்து அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள், மு. போ. எழுத்தாளர்கள்.

பரிசு கொடுத்தது பிழை என்று கூறிவிட்டுப் பரிசு பெற்ற முஸ்லிம் எழுத்தாளருக்குப் புறம்பான பாராட்டு விழா நடத்தியது வியப்பாக எல்லோர் மனதிலும் இருக்கிறது.

## மாண்பு மிக்க...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திறன் உண்டு என்பதை நிரூபிப்போம். மலைமக்களாகிய நாம் வாழ ஆசைப்படுகின்றோம். அந்த ஆசைகள் அத்தனையும் நிராசைகளாகப் போகக்கூடாதென்ற கவலை எமக்குண்டு. தொழிலாளர் கழகம் கடமையைச் செவ்வனே செய்து வருகிறது. கடமைக்கும் உறவுமில்லை, பகையுமில்லை, விருப்புமில்லை, வெறுப்புமில்லை. வாழ்க தொழிலாளர் கழகம்.

## சாதி, சமய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நீர் ஊற்றுவோம். பகுத்தறிவு செழித்து வளரும்.

இப் பகுத்தறிவால், அறியாமை — மூடநம்பிக்கை நீங்கி, நம் சமூகம் மறுமலர்ச்சிப் பாதையிலே முன்னேறுவது உறுதி. அம்முன்னேற்றத்தின் பயனால், மொழி, குடி, வாக்குரிமை பெற்றே தீருவோம். எனவே, விடுதலைக்காக, சமூகம்சீர்திருந்த,'அறிவாயுதம்' கொண்டு 'அறியாமை' என்னும் பேயை அடித்து விரட்டுவோம் மலைநாட்டிலிருந்து.

## உரிமைப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குவோம், ஒடுக்குவோம், அடிமைப்படுத்துவோம் என்று ஆளும் வர்க்கம் ஆர்ப்பரிக்க ஆரம்பித்து விட்டது.

தன்மானத்துடன் வாழ்வதா? தன்நிலை கெட்டுத் தாழ்வதா? தலைநிமிர்ந்து போர்தொடுத்து வாழ்வதா?

தமிழ் பேசும் இனம் இந்த மூன்றில் எந்நிலை... புலிதானோ அதை அறிந்து கொள்ளட்டும்.

### பதில் தலைமையாசிரியரின் தன்மானமற்ற செயல்

ஆனைக்கலை இராமகிருஷ்ண மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை க. பொ. த. வகுப்பு வரையுள்ள தனித் தமிழ்ப் பாடசாலையாகும். இங்கு ஓர் சிங்களத்தில் சித்தியெய்திய ஓர் தமிழ் ஆசிரியை தமிழ்ப் பிள்ளைகளுக்கு பலவந்தமாகச் சிங்களம் கற்பிப்பதற்கென சமீப காலத்தில் நியமிக்கப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. இந் நியமனத்தை எதிர்த்து பாடசாலை மாணவர்கள் சுமார் ஒருமாதகாலம் வரை பாடசாலையைப் பகிஷ்கரித்ததை யாவரும் அறிவர்.

இது 450 பிள்ளைகளைக் கொண்ட ஓர் சிரேஷ்ட பாடசாலையாக இருந்தும், மூன்றும் வகுப்பில் இருந்து ஆறும் வகுப்புவரையுள்ள சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்ற 20 பாலகர்கள் மாத்திரம் சிங்களத்தைக் கற்று வருகிறார்கள். ஏழாம் வகுப்பில் இருந்து க. பொ. த வகுப்பு வரை உள்ள மாணவர்கள் இப்பொழுதும் சிங்களம் கற்பதை வெறுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால் இன்று இப் பாடசாலையில் உள்ள பதில் தலைமையாசிரியர் கல்விக் கந்தோருடன் தனிச் சிங்களத்திலே சகல தொடர்புகளையும் வைத்துக் கொள்ளுகிறார். கல்விக் கந்தோரில் உள்ள சிங்கள உத்தியோகத்தர் இதையிட்டுப் பெருமை கொள்ளும் தருணத்தில் தன்மானமுள்ள தமிழர்களின் நெஞ்சம் குமுறுகிறது.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் சிங்களத்தைப் பகிஷ்கரிக்கும் இந்நாளில் இந்த நபரின் துரோகமான செயல் அவமானத்துக்குரியதாகுமென்று இங்குள்ள பிள்ளைகளும் பெற்றோர்களும் பேசிக்கொள்கின்றனர்.

## தமிழர் தெற்கே சிங்களவர் வடக்கே

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் வடக்கு மாகாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா சிங்களத்தை வட பகுதியில் புகுத்துவதிலுள்ள கஷ்டத்தை வெகுவிரிவாக எடுத்துரைத்தாரென்றும் சிங்கள மொழித் திணிப்பில் தமக்கிருக்கும் ஆர்வத்துக்கேற்ற வகையில் அரசாங்கம் தமது கோரிக்கைகள் எதையுமே நிராகரிக்காது. உடனுக்குடன் நிறைவேற்றித் தரவேண்டுமென்று வற்புறுத்தினுரென்றும் அறியப்படுகிறது.

அரை குறையாகச் சிங்களம் படித்த தமிழ் உத்தியோகத்தர்களை வைத்துக் கொண்டு தம்மால் எந்த நிர்வாகத்தையும் சிங்களத்தில் செய்வது முடியாதென்றும், சிங்களவர்களாகவுள்ள ஊழியர்களையே உடனடியாக அரசாங்கம் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மாற்றித் தரவேண்டுமென்றும் வன்மையாகக் கூறினுராம்.

சிங்களத்தை எவ்வளவுதான் படித்தவர்களானாலும்; மொழித் திணிப்பு விடயத்தில் தமிழர்களை எள்ளளவும் நம்ப முடியாது என்றும், தமிழ் ஊழியர்கள் எல்லோரும் எப்பொழுதும் தமிழரசு அனுதாபிகளாகவே இருக்கக் கூடுமாதலின் அவர்கள் அனைவரையும் உடனடியாக தென் மாகாணத்துக்கு மாற்றிவிட... நெவில் ஜயவீரா ... தாகக் கூறப்படுகிறது.

## பல்கலைக் கழகத்தில்..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் செயற் குழுவில் இருந்த 5 தமிழர்களில் இருவர் இராஜினுமாச் செய்தனர். சுமார் 100 தமிழ் மாணவர்கள் உள்ள மன்றத்திலிருந்து 59 தமிழர்களும் 2 சிங்கள மாணவர்களும் தமது இராஜினுமாக்களைச் சமர்ப்பித்தனர்.

பத்திரிகை யொன்றிலும் செய்தி வெளிவந்தது. சமசமாஜிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும்செய்வதறியாது திகைத்தனர். மன்றத்தின் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டினர்.

பத்திரிகைச் செய்தி தவறானது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் எனச் சிங்களவர்கள் விடாப்பிடியாக நிற்க மன்றத் தலைவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

### பல்கலைக் கழகத்தில் மூவர்ணக் கொடி

கூட்டத்திலிருந்த தமிழ் மாணவர்கள் வெளிநடப்புச் செய்தனர். அதன் பின், தாம் விரும்பிய தீர்மானத்தை அந்த வகுப்புவாத எண்ணங்கொண்ட நபர்கள் நிறைவேற்றிப் பத்திரிகைக்கும் அனுப்பி வைத்தனர்.

பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன் ஏற்றிய மூவர்ணக் கொடியை என்றுமே தாழ்த்துவதில்லை என்று தமிழ் மாணவர்கள் சங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

### பிளவு ஏற்படுத்தும் பிற்போக்குவாதிகள்

ஒருசில எட்டப்பர்களுக்கு இதைக் காணச் சகிக்கமுடியவில்லை. தமிழ் மாணவர்களிடையே, 'கொழும்பு மாணவர்கள்,' 'யாழ்ப்பாண மாணவர்கள்' என்ற பிரிவினையை வளர்க்க முயற்சித்தார்கள். ஆனால் கொழும்பிலே சிங்களவர் மத்தியில் கல்வி பயின்ற தமிழ் மாணவர்களும் வட, கீழ் மாகாணத்திலிருந்து வந்த தமிழ் மாணவர்களோடு சேர்ந்து பல்கலைக் கழகத்தில் தமிழரசு இயக்கத்தை வளர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதால் இந்தத் துர்ப் பிரசாரம் எவ்வித பலனுமளிக்கவில்லை.

தமிழ் பேசும் இளைஞர்கள் — பல்கலைக் கழக மாணவர்கள், தம் இனத்தின் உரிமைக்காக எவ்வித போராட்டத்தையும் நடாத்தத் தயார், எவ்வித தியாகத்தையும் செய்யத் தயார் என்பதை இந்த நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இதையிட்டுத் தமிழ் பேசும் மக்கள் பெருமைப் படுகிறார்கள், தம் இளம் சமுதாயத்தினரைப் போற்றுகிறார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனே அடிக்கடி அவன் காதுகளில் ஒலிக்கின்றன. உமா கூறியபடி செய்து விட்டாள்.

'இராமச்சந்திரன், பாக்கியசாலிதான்...!

மயானத்து நரிகள்குவிந்து ஊளையிடும் அவன் இதயத்தின் ஒரு மூலையில்...யாரோ ஒருத்தி அவனுக்காகக் காத்திருப்பது போல......ஏதோ ஒரு அன்பு அவனை அழைப்பது போல...

—அவன் முடிவு செய்து விட்டான்; வெளியே மழை பொழிகிறது.

(அடுத்த இதழில் முடியும்)


சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதரட்சையின் சுயசரிதை

—அரியஜோதி கந்தவனம், டிக்கோயா—

அன்று நான் பலரும் போற்றும் பலவித மான வர்ணங்களில் பார்ப்போர் வியக்கத்தக்க முறையில் அழகாகச் செய்யப்பட்டேன். பிறகு நான் ஒரு பெரிய பெட்டியிலடைக்கப்பட்டுப் புகை வண்டி நிலயத்திற்குக் கொண்டு செல்லப்பட்டேன். புகை வண்டியிலே என்னைப் போலப் பலருடன் ஏறினேன். புகை வண்டிப் பிரயாணம் எங்களுக்குப் பெரும் இன்பத்தை யளித்தது. நான் நினைத்தேன், இப்படியே புகை வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதே எங்களுடைய வேலையாக்குமென்று. ஆனால் நினைப்பது நடந்து விடுமா? நாங்கள் வேறொரு புகையிரத நிலயத்திலிறக்கப்பட்டோம்.

எம்மைக் கொண்டு வந்தவன் ஒரு பெரிய கடையில் கொடுத்தான். அக் கடையில் என்னைப் போல பலபல வகைகளில் இருந்தார்கள். ஆனால் என்னைப் போன்று கவரும் தன்மை அதிகமாக இல்லை. அக் கடையிலுள்ள முதலாளி என்னைப் பார்த்ததும் புன்னகை பூத்தார். என்மேல் அவருக்குத் தனி அன்பு பிறந்து விட்டது. எல்லோரையும் ஒவ்வொரு ஜோடிகளாகச் சிறுசிறு பெட்டியிலடைத்துப் பெரிய அலுமாரியில் வைத்து விட்டார். ஆனால் என்னை மட்டும் என் ஜோடியுடன் கடையின் முற்றத்தில் வருவோரும் போவோரும் பார்க்கும்படியாக வைத்தார். எல்லோரும் என்னைப் பற்றிப் புகழ்ந்தார்கள். புகழ் ஏற்படும் போது தற்பெருமை வருவது இயல்பு தானே? என்னுடைய இன்ப வாழ்வு அந்தச் சிறு கண்ணாடிப் பெட்டியில் நீடிக்கவில்லை.

சில நாட்கள் சென்றன. எங்கள் கடைக்கு ஒரு அழகிய, நாகரிகப் பெண்மணி வந்தாள். அவள் கால்கள் பட்ட இடமெல்லாம் பஞ்சாகி விடுமோ என்று பிறர் அஞ்சக்கூடிய மென்மையான கால்கள். ஆனால் அவளுடைய கயல் விழிக் கண்களுக்கு முதலில் என்னுடைய உருவம் தான் காட்சியாயிற்று. அவளுடைய இளகிய மனதிற்கு என்னைப் பிடித்திருந்தது. அவள் தனது வாழைக் குருத்துப் போன்ற அழகிய மென்மையான கைகளிலுள்ள தாமரை இதழ்கள் போன்ற விரல்களால் என்னைத் தொட்டாள். அவள் விரல்கள் தொட்ட இடமெல்லாம் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. என்னை முதன் முறையாக அவளுடைய ஒரு கால் முத்தம் செய்தது. அதில் எனக்கு ஏற்பட்ட இன்ப உணர்ச்சி சீதையின் கணவனான இராமனுக்குக் கூட ஏற்பட்டிருக்காது. நான் அவளுக்கு அளவாக இருந்தபடியால் என்னை எடுத்துக் கொண்டு விடு நோக்கி விரைந்தாள். வாழ்க்கை என்றும் பாதை ஒரு இடத்தில் நின்று விட முடியுமா? பல இடங்களிலும் சென்றால்தானே பலருக்கும் நன்மையிருக்கும்.

அவள் தன் வீட்டிற்கு வந்து, என்னைப் பற்றிப் பலரிடம் அவளுடைய பூவிதழ் போன்ற இதழ்களில் பெருமையாகச் சொல்லும் பொழுது யாருக்குத்தான் இன்பம் வராது? அவள் இப்பொழுது என் எஜமானியாகி விட்டாள். என் எஜமானி என்னையும் என் ஜோடியையும் பாதுகாப்பான இடத்தில் வைத்தாள். நாங்கள் மற்றப் பாதரட்சைகளைப் பார்த்து கேலி செய்தோம். என்னை விருந்திற்கு அல்லது கோயிலுக்குப் போன்ற பெரிய இடங்களுக்குத்தான் போடுவாள். அவளுக்கு என்னைப் போட்டுக் கொண்டு பலரிடமும் பெருமையாகச் சொல்வதில் ஒரு தனி இன்பம். எனக்கு அவளுடைய கால் என்னை முத்தஞ் செய்வதிலின்பம். இன்பம் நிலைத்திருப்பதில்லையல்லவா? அதுபோல் என்னுடைய வாழ்விலும் துன்பம் குடிகொண்டது.

அன்று அவள் கோயிலுக்குப் போகும்பொழுது என் நிறத்திற்கு ஏற்றபடி சேலையும் ரவிக்கையும் அணிந்திருந்தாள். நான் சேலையைப் பார்த்துப் பொறாமைப் பட்டேன். நாமிருவரில் யார் மிகவும் அழகு? என்றேன். சேலை நான்தான் என்றது. எனக்கு என்னை விடச் சேலை அழகாயில்லை என்றுதான் தோன்றிற்று.

அப்பொழுது அங்கு ஒரு பெண்மணி வந்தாள். 'இந்தச் சேலை மிகவும் அழகாயிருக்கிறதே, எங்கே வாங்கினாய்?' என்று பேசிவிட்டுப் போய் விட்டாள். சேலை என்னைப் பார்த்து ஒரு வெற்றிப் புன்னகை பூத்தது. என்னுடைய கோபம் வேள்வியில் விட்ட நெய்போல எரிந்தது. 'இரு, உனக்கு நன்றாகப் பாடம் கற்பிக்கிறேன்' என்று சொன்னேன்.

எனது எசமானி ஒரு சகதி நிறைந்த இடத்தில் நின்று கொண்டிருந்தாள். நான் மெதுவாக அவள் காலிலிருந்து வின்று சிறிது விலகினேன். அவள் கீழே விழுந்தாள். அவளுடைய புடவை சகதியில் அடிபட்டது. அவள் எல்லோர் முன்னிலையிலும் அனலிலிட்ட புழுப்போல அவமானத்தால் துடித்தாள். அன்றிலிருந்து எனது இன்ப வாழ்வு மறைந்தது. ஒருவாறு காரில் ஏறி வீடு வந்து சேர்ந்தாள். என்னால் தானே அவளுக்கு இப்படி அவமானம், அதனால் என்னை மூலையில் தூக்கி எறிந்தாள். அன்றிலிருந்து [illegible] ஒரு கிழிந்த பெட்டியின் அடியில் கிடந்தேன்.

## கண்டு பிடித்தவரை பிடியுங்கள்?

[உலகில் சில முக்கியமான கண்டு பிடிப்புகளும், அவற்றைக் கண்டு பிடித்தோரின் பெயர்களும் இங்கு பிழையாகத் தரப்பட்டுள்ளன. அவற்றில் யார் உண்மையில் எதைக் கண்டுபிடித்தார் என்பதைக் கண்டு பிடிப்பது உங்கள்வேலை. எங்கே பார்ப்போம்!]

பெல் (Bell)—நீராவி இயந்திரம்
எடிசன்—தொலைபேசி
ஸ்டீபென்ஸன்—இடியேறுதாங்கி
மார்க்கோனி-பவுண்டன் பேனா
பெஞ்சமின் பிராங்க்ளின்—மின்சார விளக்கு
மிசோக்ஸ்—ரேடியோ
சோலெஸ்—தெர்மோமீட்டர்
ஹொலண்ட்—தட்டெழுத்து இயந்திரம்
வாட்டர்மன்—நீர் மூழ்கி
வாத்றன்ஹைற்—பைசிக்கிள்

(விடை அடுத்த வாரம்)

அனுப்பியவர்:
செல்வி பாப்பா
திருநெல்வேலி.

## மர்மத் தொடர்கதை பற்றி மாமாவுக்கு.........

வின்சன்ற் மகளிர் கல்லூரி,
மட்டக்களப்பு.
30—9—63

அன்புள்ள மாமா,

சுதந்திரனில் மாஸ்டர் சிவலிங்கம் எழுதும் "புதுமைத் திருடன்" மர்மத் தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாயுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் அடுத்து என்ன நேருமோ என்ற பரபரப்பை எங்கள் மனதிலே ஏற்படுத்துகின்றது. மாஸ்டர் எல்லோருக்கும் புரியக் கூடிய எளிய தமிழ் நடையில் அதனை எழுதுகிறார்.

ஒவ்வோர் வாரமும் கூடிய அளவு அதிகமாகப் பிரசுரிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
மருமக்கள்:

சித்ரா-கணபதிப்பிள்ளை, ஜெயமல்லிகா-ஞானசேகரம், இந்திராணி-மகேசன், நகுலேஸ்வரி-குழந்தைவேல், சாந்தி-பிள்ளை, யோகராஜமலர்-ஞானமுத்து, விக்னேஸ்-நாகலிங்கம், சந்திராதேவி-கிருஷ்ணபிள்ளை, குணநேசம்-வெள்ளக்குட்டி, சத்தியம்-முத்தையா, அற்புதஜோதி-குமாரசாமி, சுலைபதா-இஸ்மாயில், சிவலோகநாயகி-பரசுராமன், புனிதவதி-மதுரநாயகம், ஐனூன்-காரியப்பர், புவிநாயகி-இளையதம்பி, அழகுராணி-அழகையா, ஜெயதேவி-நாகமணிப்பிள்ளை, சில்வறின்-வேதநாயகம்.

மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

கறுப்புக் கண்ணாடிக்கு வியர்த்துக் கொட்டியது. அங்குமிங்கும் வெருட்சியுடன் பார்த்தான். அந்தப் பக்கத்தில் யாரையும் காணவில்லை. மெதுவாகச் செட்டியாரின் மணிபர்சையும், அவர் அணிந்திருந்த வைரக்கல் பதித்த இரு மோதிரங்களையும் அவசர அவசரமாக அபேஸ் பண்ணித் தனது பையில் திணித்துக் கொண்டான். பிரயாணப் பையைத் தூக்கித் தோளிலே மாட்டிக் கொண்டு கோணேசர் கோட்டையிலிருந்து வெளியேறினான்.

(6)

பசறைத் தபால் நிலயத்திற்குள் அவசர அவசரமாக நுழைந்தான் ஒரு இளைஞன். படபடவென்று ஏதோ எழுதித் தபாலுறைக்குள் திணித்துத் தபால் பெட்டிக்குள் போட்ட பின்புதான் நிம்மதியாக மூச்சுவிட்டான். அந்த இளைஞன்...! வேறு யாருமல்ல கறுப்புக் கண்ணாடியேதான். அவனுடைய அழகிய கறுத்தப் பிரயாணப் பை இலாவகமாக அவனுடைய தோளில் தொங்கிக் கொண்டிருந்தது.

அன்று பசறைத் தபால் நிலயத்தில் ஒரே கூட்டம். எந்த நேரமும் மக்கள் வருவதும் போவதுமாயிருந்தனர். அங்கு வந்தவர்களையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டு நின்றான். உற்சாகமின்றிக் காணப்பட்ட அவனுடைய முகம் திடீரென்று மலர்ந்தது. காரணம்...! கூட்டத்தின் மத்தியில் ஏதோ முக்கிய கடிதத்தை மிக அக்கறையுடன் படித்துக் கொண்டிருந்த ஒரு மனிதரின் சேட் பையில் திணிக்கப்பட்டிருந்த மணிபர்ஸ் அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. மனதில் ஏதோ திட்டத்தை உருவாக்கிக் கொண்டு மணிபர்சுடன் நின்ற அம்மனிதனை நோக்கிக் கூட்டத்தை முண்டியடித்துக் கொண்டு முன்னேறினான்.

அடுத்த நிமிடம்.......திடீரென்று அந்த மனிதன் மேல் மோதினான். திடீர் மோதலுக்கு இலக்கான அந்த மனிதர் ஒருகணம் திகைத்து விட்டார். மறுகணம் ஒருவாறு சமாளித்துக் கொண்டார். "சார்! தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்...தெரியாமல்..." பல்லை இளித்தான் இளைஞன். "அடடே! அதற்கென்ன பரவாயில்லை...!" என்று கூறிக் கொண்டு மீண்டும் தனது கடிதத்தைப் படிக்க ஆரம்பித்துவிட்டார் அம்மனிதர். தபால் நிலயத்தை விட்டுக் கறுப்புக் கண்ணாடி வெளியேறியபோது....அந்த மனிதருடைய மணிபர்ஸ் அவனுடைய சட்டைப் பையில் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வானம் மப்பும், மந்தாரமுமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. தூறலை மழையைப் பொருட்படுத்தாது, சொட்டச் சொட்ட நனைந்தவாறு கோணக்கொல்லைத் தோட்டத்திற்குச் செல்லும் பாதையில் நடந்து கொண்டிருந்தான் கறுப்புக் கண்ணாடி.

அப்போது...அவனை முந்திச் சென்ற காரொன்று சிறிது தொலைவு சென்றதும் திடீரென்று நின்றது. பசறைத் தபால் நிலய நிகழ்ச்சி ஒரு கணம் அவன் மனத்திரையில் தோன்றி மறைந்தது. சட்டைப் பையிலிருந்த மணிபர்சை எடுத்துப் பிரயாணப் பையில் திணித்துக்கொண்டான். அப்போது கார் அசையவில்லை. பிரயாணப் பையிலிருந்த சுழல் துப்பாக்கியை எடுத்துக் கால்சட்டைப் பையில் திணித்துக் கொண்டு விரைவாக நடந்தான்.

காரை நெருங்கியதுந்தான் அக்கார் நிறுத்தப்பட்டதன் காரணம் அவனுக்குப் புரிந்தது. கார் நிறுத்தப்பட்டதற்குக் காரணம் இயந்திரக் கோளாறுதான். இயந்திரத்தைச் சீர்படுத்துவதில் சாரதி ஈடுபட்டுக் கொண்டிருந்தான். காரைத் தாண்டி அவன் நடக்க ஆரம்பித்தான். அப்போது "சரி சரி... நம்ம இருப்பிடம் ரொம்பப் பக்கத்துலதான்......நடந்தே போயிடுறேன்..." என்று கூறிக் கொண்டே கறுப்புக் கண்ணாடியை நோக்கி வந்தார், அக்காரில் பிரயாணம் செய்த ஒரு மனிதர். அவர் தோட்டக் கங்காணியார் என்பதை இளைஞன் இலகுவில் புரிந்து கொண்டான். இருவரும் பேசிக் கொண்டே நடந்தனர்.

தானொரு சர்வகலாசாலை மாணவனென்றும், தனக்குத் தாவர சாத்திரத்தில் விசேட ஆர்வமாதலால் தேயிலைச் செடியைப் பற்றிச் சில நாட்கள் ஆராய்ச்சி செய்யவே வந்துள்ளதாகவும், பசறையிலே தான் தங்கியுள்ளதாகவும் புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டான். அவனுடைய பேச்சில் சொக்கிப் போன கங்காணியார், அவனுடன் பேசிக் கொண்டு நடப்பது தனக்குப் பெரிய கௌரவம் என்று மனதில் எண்ணிக் கொண்டார்.

தான் கூடப் பசறைக்குச் சென்று தனது மகளின் திருமணத்திற்குச் சில நகைகள் வாங்கி வருவதாகவும், வழியில் தான் வந்த கார் பழுதடைந்ததாலேதான் நடந்து வருவதாகவும் இளைஞனிடம் கூறினார். நகைகள் என்றதும் அவனுடைய புருவங்கள் நெளிந்து சுழித்தன. அந்தப் பாதையில் ஜன நடமாட்டமே தென்படவில்லை. சூழ்நிலை தனக்குச் சாதகமாயுள்ளதை எண்ணியதும் அவனுக்குத் தனி உற்சாகம் இளம்பியது.

அவன் ஒரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு கங்காணியாரிடமும் ஒன்றை நீட்டினான். அவர் பெருமையோடு வாங்கிப் புகைத்தார். அடுத்த விநாடி...... "ஐயோ! ஆண்டவா......!" என்று அலறியபடி அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு பாதையில் விழுந்தார். அவன் அவருடைய பைகளைத் துளாவியபோது... சற்றுத் தொலைவில் இயந்திரக் கோளாறினால் கிடந்த கார் பயங்கர இரைச்சலுடன் விரைந்து வந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

## உங்கள் சிந்தனைக்கு

ஆயிரம் மைல் பிரயாணமானாலும் ஒரு அடியில் தான் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## ஈழக்கலை மன்றத்தினர் நடாத்திய இலக்கியச் சொற்பொழிவு விழா

### சிங்கள-தமிழ் மொழி வல்லுனர் வண. தர்மரத்தின தேரோவின் சிறப்புரை

"எமது திணைக்களத்தின் நூற்றறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றிலே, அதுவும் இன்றைய தமிழர் நிலையிலே, முதன் முறையாக ஓர் இலக்கியச் சொற்பொழிவை ஈழக்கலை மன்றத்தினர் துணிவுடன் நிகழ்த்துகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த விழாவில் வண. தர்மரத்தின தேரோப் பண்டிதர் அவர்கள் பங்கு கொண்டு சிங்கள—தமிழ் இலக்கியங்களைப் பற்றிய தமது ஆய்வுச் சொற்பொழிவை நிகழ்த்துவது பெருஞ் சிறப்புக்கு உரியதாகும். இப்பெருந் தமிழ் விழாவில் தலைமை தாங்குவதில் உண்மையிலேயே நான் பெருமையுறுகின்றேன்" என்று தமது தலைமையுரையில் திரு. க. வயிரமுத்தையா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சென்ற மாதம் 19-ம் நாள் மாலை நில அளவைத் திணைக்களச் சொற்பொழிவு மண்டபத்தில் நிறைகுடம் குத்துவிளக்குகளுடன் விளங்கிய அரங்கில் "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழியே" என்ற பாரதியின் வாழ்த்துப் பா ஒலியுடன் இலக்கியச் சொற்பொழிவு ஆரம்பமாகியது.

தமிழில் புலமை வாய்ந்தவரும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தவரும், "சிங்கள மொழியில் தமிழ் மொழியின் செல்வாக்கு" போன்ற ஆய்வு நூல்களைச் சிங்களத்தில் வெளியிட்டவரும், யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் படித்துத் தமிழருடன் வாழ்ந்து பழகியவருமான வண. தர்மரத்தின தேரோ அவர்கள் "சிங்கள மொழி வாழ்க, தமிழ் மொழி வாழ்க" என்று வாழ்த்தித் தமது சொற்பொழிவைப் பலத்த கரகோஷங்களுக்கிடையே ஆரம்பித்தார்.

பாரதி பாடியது போன்று தமிழனென்று சொல்லித் தலை நிமிர்ந்து தமிழ் மக்கள் நிற்கக் கூடிய வகையில் தமிழ் இலக்கியம் வரையறையில்லா வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. இயல், இசை, கூத்து என்று முக்கனிச்சோலைகளாகத் தமிழை வளர்த்த—வளர்க்கும் பெருமை தமிழுக்கே உண்டு, வேறு எம் மொழிக்கும் இல்லை. கி. மு. 100 ஆண்டுகளுக்கு முன்பே பௌத்தம் இலங்கையில் பரவத் தொடங்கியது. அக்காலத்திலேயே முதன்முதலாகச் சிங்கள மொழி பௌத்த ஞானிகளால் வளம் படுத்தப்படும் வாய்ப்பைப் பெற்றது. அதற்குப் பாளி, வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளே பேருதவி புரிந்தன. எடுத்துக்காட்டாக 16ம் நூற்றுண்டில் வாழ்ந்த "சுபாசிதம்" எழுதியவரான "அழகிய வண்ண முகவெட்டியார்" என்பார் தமிழ் நூல்களில் இருந்தே பலவற்றை மொழிபெயர்த்து எடுத்தாண்டார். "லோகோபகாரம்" எழுதியவரான 17ம் நூற்றுண்டுக் குரு ஒருவர் திருக்குறளை மொழிபெயர்த்துச் சேர்த்துள்ளார் என்று கூறிப் பல சிங்கள இலக்கியங்களில் மூதுரை, நீதிவெண்பா, திருக்குறள் போன்ற பல பழந் தமிழ் நூல்களின் பகுதிகள், கருத்துக்கள் மொழிபெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்பட்டிருப்பதைத் தெளிவுறக் காட்டி உதாரணங்களுடன் விளக்கினார்.

தமிழ் இலக்கியத்தின் சிறப்புக் குன்ற வண்ணம் காலத்திற்கு ஏற்ற வகையில் அதை வளர்த்து வர வேண்டும்; சிங்கள இலக்கியம் தற்காலத்திற்கேற்ப வளர்ந்து வருகிறது. எங்கள் தாய் மொழி இலக்கியங்களை மேலும் வளர்ப்பது எங்கள் தலையாய கடனாகும்; இதற்கு நாம் ஒன்றிணைந்து பாடுபட்டுச் செயல் புரிய வேண்டும். இத்தகைய விழாக்களே இதற்குகந்தன என்று கூறி இரு இனத்தவரையும் மொழிகளையும் வாழ்த்தி நிறுத்தினார்.

திரு. கி. இலக்குமணன் எம். ஏ. அவர்கள் "பழம் தமிழ் மக்கள் இறைவன் எண்ணமின்றி இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்தார்கள், பின்பே அவர்களிடை பல்வேறு கடவுள் வணக்கங்களும் புகுத்தப் பெற்றன" என்போர், உதாரணமெடுக்கும் சங்க இலக்கியங்களிலேயே, பல எடுத்துக்காட்டுகளை எடுத்து விளக்கிப் பல்வேறு கடவுள் வணக்கங்களும் பழம் தமிழ் மக்களிடையே வழக்கிலிருந்தன என்றார். தமிழை வளர்ப்பதற்குத் தமிழைப் படிப்பதும் ஒரு வழியென்றும் எளிய நடையில் வெளியிடப் பெற்றுள்ள இலக்கிய நூல்களை எல்லோரும் வாங்கிப் படித்துத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

செல்வி சற்சொருபவதி நாதன் பி. எஸ். சி. அவர்கள் "பாரதியார் வள்ளுவன் போன்று உழுதுண்டு உலகோம்பும் உத்தமர்களை மட்டும் போற்றி நிற்காது, காலத்திற்கேற்ப பல் தொழில் புரியும் தொழிலாளர்களையும் போற்றி வையத்தை வாழ்விக்கும் கடவுள் நிலைக்கு உயர்த்திவிட்டார், ஆகவே நாம் எங்கள் உண்மை நிலையை உணர்ந்து உழவையும் தொழிலையும் போற்றி எமது எதிர்கால வாழ்வை எழிலுறச் செய்ய வேண்டும்" என்றார். உள்ளம் ஏற்று, உண்மை உணரும் வகையில், அவர் ஆற்றிய சொற்பொழிவு எல்லோர் இதயத்தையும் ஈர்த்தது.

### புவாக்பிட்டியவில் பாரதி விழா

"சிந்தனையைத் தூண்டிவிட்டு, அடிமைத் தளையில் கிடந்து, அறிவற்ற மக்களுக்கு அறிவுக்கனல் காட்டி, ஆய்வுப் பணி புகட்டி, ஆக்கப் பணி புரிய வைத்தவன் புரட்சிக் கவிஞன் பாரதியார். நேற்றைய நிகழ்ச்சிகளையும்-இன்றைய நிகழ்ச்சிகளையும், நாளைய நிகழ்ச்சிகளையும் உள்ளத் தெளிவோடு ஊன்றிக் கவனித்தவர் பாரதி. அதன் பலன் இன்று நாம் காணும் சமூகத்தின் நிலையையும் பாரதியின் கவிதைகளையும் நயத்தோடு பொருள் விளங்க நாம் காணும் போது தெளிவு விளங்குகிறது. விழா எடுத்ததோடு நின்றுவிடாது, "செயல்" மூலம் வாழ்ந்து காட்டும் சமுதாயம் உருவாக வேண்டும். அப்போது தான் கவிஞன் பாரதியின் கனவு நனவாகும்."

இவ்வாறு, சென்ற 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை புவக்பிட்டிய வாலிப முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 'பாரதி விழா'வில், "பாரதி கண்ட பாழடைந்த சமூகம்" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்திய இளம் எழுத்தாளர், எட்டியாந்தோட்டை திரு. ஆர். எஸ். மணி குறிப்பிட்டார்.

திரு. கோமஸ், திருமதி அந்தோனி இன்னும் பலரும் பேசினர். விழாவில், 'திருப்புமுனை', 'சாக்ரட்டீஸ்' என்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

ஈற்றில் சங்கச் செயலாளர் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

### கந்தரோடையில் பாதயாத்திரைக் குழு

தமிழர்கள் அனைவரும் பங்கு கொள்ளக் கூடிய போராட்டமாக இருந்தால் தாங்களும் பங்குபற்றுவோம் என்று கூறுகின்ற சமசமாஜத் தோழர்கள் தமிழரசுக் கட்சி நடத்திய தமிழியக்கம் போன்ற போராட்டங்களில் கலந்து கொள்ளாதது ஏன்? என்று பாத யாத்திரைக் கோஷ்டிக்கு கந்தரோடை சனசமூக நிலையம் வைத்த பொது வரவேற்பில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் கேட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: கடந்த காலத்தில் நடந்த போராட்டங்களில் தோழர்கள் பலவீனப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஆகையினுல் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தோழர்களில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எமது இனத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கின்றது. நாம் இனி அரசாங்க உத்தியோகங்களை நம்பிப் பயனில்லை. மாதம் மாதம் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பதவியிலிருந்து வெளியேறி அயல் நாடுகளுக்குச் செல்கிறார்கள்.

இவ்வரவேற்பில் பேசிய உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் கூறியதாவது: தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து தோழர்கள் பேசிய [illegible] மாக அவர்கள் என்ன போராட்டம் நடத்தினர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். அவர்கள் போராட்டம் தொடங்கினுல் நாங்களும் போராட்டத்தில் பங்குபற்றத் தயார்.

பின்பு திரு. துரைரத்தினம் எம். பியும் மற்றும் பலரும் பேசினர்கள். ஒரு தேநீர் விருந்தும் நடைபெற்றது.

### வில்லுப்பாட்டு விழா

மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் குழுவினரின் 75-வது வில்லுப்பாட்டுப் பூர்த்தி விழா 5-10-63-ல் மத்திய கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு மத்திய கல்லூரி அதிபர் திரு. வி. ரி. ஞானசூரியம் தலைமை தாங்கினார். 'முழக்கம்' முருகப்பாவின் தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமானது.

கண்டி மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை, மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை ஆகியோர் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை வில்லிசைக் குழுவைச் சேர்ந்த திரு. ஆர். டி. கிருபைரத்தினம், கவிஞர் குணரெத்தினம் ஆகியோர் படித்தனர்.

தலைவர் தமது தலைமை உரையில் பேசுகையில் "தமிழ் நாட்டில் நகைச்சுவை வில்லுப்பாட்டை ஆரம்பித்தவர் 'கலைவாணர்' என். எஸ். கே. அவர்கள். ஈழத்தில் நகைச்சுவை வில்லுப்பாட்டை ஆரம்பித்தவர் 'நகைச்சுவைக் குமரன்' மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள். ஆகவே திரு. மாஸ்டர் சிவலிங்கத்தை 'ஈழத்து என். எஸ். கே' என்று குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமுடையதாகும்" என்றார்.

தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. அன்புமணி பேசுகையில் மாஸ்டர் சிவலிங்கம்வில்லிசைக்குழுவினர் சிறந்த பண்புள்ளம் கொண்டவர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் இயங்கும் இக் குழுவினருக்கு எமது பாராட்டுக்கள்" என்றார்.

வின்சன்ற்மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை பேசுகையில் "மக்கள் மத்தியில் சிரிப்புடன் சிறந்த கருத்துக்களைப் பரப்பி வருபவர்கள் மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் குழுவினர். அவர்களுடைய வில்லுப்பாட்டு ஒவ்வொரு கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும்" என்றார்.

கவிஞர் திமிலைத்துமிலன் பேசுகையில், "மாஸ்டர் வில்லுப்பாட்டுக் குழுவினர் முதன் முதல் வில்லுப்பாட்டு ஆரம்பித்த காலத்திலே ஒரு சிலர் கிண்டலும் கேலியும் செய்தனர். ஆனால் இன்று அவர்களே பாராட்டும் நிலை ஏற்பட்டுள்ளதென்றே மாஸ்டர் குழுவினரின் மகிமையைக் காட்டுகிறது" என்றார்.

வில்லுப்பாட்டுக் குழுத் தலைவர் திரு. மாஸ்டர் சிவலிங்கம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார். ஈற்றில் தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது.

### திருமலை ஜோதியின் மறைவுக்கு அநுதாபம்

கட்டைக்காடு சென் மேரிஸ் இளைஞர் சங்கக் கூட்டம் 28-ந் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிபோல் தலைவர் திரு. க. மரியாம்பிள்ளை, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் அவர்கள் தமது உரையில், மறைந்த தலைவரின் அளப்பரிய சேவைகளை எடுத்துக் கூறினார். அத்துடன் அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக 2 நிமிட மௌனம் அநுஷ்டிக்கப்பட்டதுடன் இத் தீர்மானத்தின் பிரதிகளில் ஒன்று திரு. இராசவரோதயத்தின் குடும்பத்துக்கும் மற்ருென்று தமிழரசுத் தந்தை செல்வநாயகத்துக்கும் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### வளரும் எழுத்தாளர் மன்றம்

ஜனுப் கே. எம். ஹசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொத்துவில் வளரும் எழுத்தாளர் மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

போஷகர்: திரு. கே. செல்வரத்தினம் (காரியாதிகாரி), உப போஷகர்கள்: திரு. இ. செ. தியாகராசா, ஜனுப் எம். எல். எஸ். முகைதீன், தலைவர்: ஜனுப் கே எம். ஹசன் (இளங்கோன்), உப தலைவர்: ஜனுப் ஏ. எல். எம். காசிம், செயலாளர்: ஜனுப் எம். ஐ. ஆதம் லெப்பை (முதல்வனர்), துணைச் செயலாளர்: ஜனுப் ஏ. எம். காசிம், பொருளாளர்; ஜனுப் கே. ஆர். எம். சகீது.

### சென்ற் மேரிஸ் இளைஞர் சங்க அடிக்கல் நாட்டு விழா

சென்ற் மேரிஸ் இளைஞர் சங்க கட்டிட அடிக்கல் நாட்டு விழா திரு. க. மரியாம்பிள்ளை அவர்கள் தலைமையில் 29-ம் திகதி முள்ளியான் கிராமசேவையாளர் அ. செலஸ்ரீன்ராசா அடிக்கல் நாட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார். அதன் பின் நடைபெற்ற கூட்டத்தில் கிராம சேவையாளர் பேசுகையில் வாசிகசாலையின் நோக்கம் பற்றிப் பேசினார். ஈற்றில் கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

### பாதை அமைத்தல்

கட்டைக்காடு சென்ற். மேரிஸ் இளைஞர் சங்கமும் கிராம முன்னேற்றச் சங்கமும் ஒன்று சேர்ந்து கட்டைக்காட்டிலிருந்து வெற்றிலைக் கேணி வரையுமுள்ள ஒன்றரை மைல் நீளமான பாதையை அமைப்பதற்கு ஆரம்ப வேலைகள் முள்ளியான் கிராம சேவையாளர் அ. செ. வஸ்ரீன்ராசா தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.


'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அக்டோபர் 23 புதன் முதல்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை)
அசோகமாலா (நீர்கொழும்பு) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருமலை)
இம்பீரியல் (மட்டக்களப்பு) ரீகல் (அம்பாறை) வேலஸ் (கண்டி)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
வின்சர் (யாழ்ப்பாணம்)

ஆனந்தன்—இ. வி. சரோஜா—அசோகன்
மற்றும் பலர் நடித்த



# வீரத்திருமகன்

## 4வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
புஷ்பலதா — கல்யாணகுமார் — நாகேஷ்
மற்றும் பலர் நடித்த



# நீங்காத நினைவு

## நவம்பர் 14 முதல்!

ரீகல் — எல்பின்ஸ்டன் — ரெக்ஸி
மற்றும் பல திரைகளில்!

ஜெமினி கணேசன் — சாவித்திரி
கமலா லக்ஷ்மணன்—மனோகர்
மற்றும் பலர் நடித்த



# கொஞ்சும் சலங்கை

---

## குதூகலமான 2வது வாரம்!




கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)

பார்த்தோர் பாராட்டும் பண்புமிகுந்த படைப்பு!
கலைக் காவியம்!!.................இன்றே பாருங்கள்!!!

மு. வரதராசனாரின்

# பெற்ற மனம்

நடிகர்கள்:
சிவாஜி கணேசன்—எஸ். எஸ். ராஜேந்திரன்—எம். என். ராஜம்
எல். விஜயலட்சுமி—எஸ். வி. சுப்பையா—எஸ். வி. ரங்கராவ்
புஷ்பவல்லி—குமாரி—சந்திரபாபு.

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

இசையமைப்பு:
எஸ். ராஜேஸ்வரராவ்

---

## 3வது வாரம் காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் [மருதானை] ராணி [யாழ்ப்பாணம்] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு] ஓடியன் [கல்கிசை]
லிபர்ட்டி [பதுளை] ஜோதி [திருகோணமலை] சென்ட்ரல் [நாவலப்பிட்டி] நியூஜோதி [இரத்தினபுரி]
ஓடியன் [கண்டி] சென்ட்ரல் (பருத்தித்துறை) லவினியா [நுகேகொடை]

பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல்
பகையையும் சாடுகிறார் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா,
எம். ஆர். ஆர். வாசு, எஸ். ஏ. அசோகன், பி. கண்ணாம்பா,
சாண்டோ சின்னப்ப தேவர்
மற்றும் பலர் நடித்த



# தாயைக் காத்த தனயன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1963-ம் வருடம் [illegible] ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org